Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 10 (29.06.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :270

# புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் போர்நிறுத்தத்துக்கு அச்சுறுத்தல்!

## கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்ததாக தமிழ்ச்செல்வன்!

(கிளிநொச்சி)

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், போர்நிறுத்த ஒப்பந்தம் சம்பந்தமாக பல குழப்பங்கள் ஏற்படுவதுடன் தரைப்போக்குவரத்து, கடல் போக்குவரத்து போன்றவற்றின் இயல்பு நிலையிலும் சில அழுத்தங்கள் காணப்படுகின்றன.

இந்த அழுத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு தெரியப்படுத்தியிருப்பதுடன், இதற்கு உடன் தீர்வு காணப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறோம் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டேதலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேசிய பின்னர் - செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்தார் எரிக் சொல்ஹெய்ம்!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பேச்சுக்களை நடத்துவதற்காக நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று கொழும்புக்கு வந்தார்.

நேற்றிரவு 8.00 மணிக்கு கொங்கொங் நாட்டிலிருந்து வந்த கத்தே பசுபிக் என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தார்.

நோர்வே தூதரகத்தின் அதிகாரிகளும், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் அவரை வரவேற்றனர்.

சமாதான பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் வன்னிக்குச் சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் குடும்பஸ்தர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள கணேசபுரத்தில் நேற்றுமுன்தினம் இரவு - 50 வயது மதிக்கத்தக்க கே.தேவராஜ் என்ற குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கருணாவுடனான தொடர்பைத் துண்டித்தாலே படையினருடன் சந்திப்புகளை நடத்த முடியும்!

## புறூவ் ஹொவ்டேயிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் படையினருடனான வழமையான சந்திப்புக்கள் நடைபெற வேண்டுமெனில், படையிரின் பாதுகாப்பிலுள்ள, கருணாவுடனான தொடர்புகளைப் படையினர் துண்டிக்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே படையினர் எம்முடன் நேர்மையான முறையில் கலந்துரையாடல்களை நடத்துகின்றார்கள் என்பதில் நாம் நம்பிக்கைகொள்ள முடியும்.**

**இவ்வாறு கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன் புறூவ் ஹொவ்டேயுடன் கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பின்போது, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

யாழ்.செயலக நிதிமோசடி விசாரணை

## வங்கிக் கணக்கு விபரங்களை சி.ஐ.டியிடம் சமர்ப்பிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் எல்.சண்முகநாதன் காலத்தில் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படும் ஊழல்கள் குறித்து ஆராயும் சி.ஐ.டி பொலிஸாரிடம் வங்கிக் கணக்கு விபரங்களை ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா குறிப்பிட்ட வங்கிகளுக்கு உத்தரவிட்டார்.

முடியும்.

**இவ்வாறு கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன் புறூவ் ஹொவ்டேயுடன் கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பின்போது, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

முன்னதாக நேற்றுப் பகல் 11. 45 மணியளவில் ஹெலிகொப்ரரில் புறூவ் கொவ்டே கிளிநொச்சியை வந்தடைந்தார். இதன்பின்னர், பிற்பகல் 1.45 மணி தொடக்கம் 2.45 மணிவரையிலான சுமார் ஒரு மணிநேரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் கண்காணிப்புக்குழுத்தலைவர் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச்சந்திப்பில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் இயல்பு நிலையைத் தொடர்ந்து பேணுவதென்றால், விடுதலைப் புலிகளும் - படைத்தரப்பினரும் அடிக்கடி சந்தித்து கலந்துரையாடல்களை நடத்த வேண்டுமென கண்காணிப்புக்குழுத் தலைவர் அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் வலியுறுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சி.ஐ.டி பொலிஸாரிடம் வங்கிக் கணக்கு விபரங்களை ஒப்படைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா குறிப்பிட்ட வங்கிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த மோசடிச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சி.ஐ.டி பொலிஸார் மேற்கொண்டு வருவதால், அவர்களிடம் வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட காசுப்பரிமாற்றம், காசோலைகளின் பெறுமதி முதலான கணக்கு விபரங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போனோர் குறித்த மனுக்கள் மீதான விசாரணை 28 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 1996 - 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனவர்கள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ஆறு மனுக்களின் முதலாவது பிரதிவாதியான கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ். மேல் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது - அவரை யூலை மாதம் 28 ஆம் திகதி ஆஜராகுமாறு மேல் நீதிமன்ற நீதிபதி வரதராஜா உத்தரவிட்டார்.



யாழ். மாவட்டத்தில் படையினரால் கைதாகிக் காணமல் போனோர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட 48 மனுக்களில் 14 வழக்குகள் நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சி.வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புத்தூரைச் சேர்ந்த செல்லத்துரை நந்தகுமாரன், அரியாலை (12 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் தலைவர்களுடனான சந்திப்பு போர்நிறுத்தத்துக்கு அவசியமானது!

## கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர்

(கிளிநொச்சி)

இராணுவம் கருணாவுக்கு உதவி செய்வதை நிறுத்தும்வரை தாங்கள் உள்ளூர் மட்டத்தில் உள்ள இராணுவ அதிகாரிகளோடு பேசப்போவதில்லை என்ற, புலிகளின் நிலைபாடுபற்றி பேசினோம். எங்களால் விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை நிருபிக்க முடியவில்லை. ஆகவே விடுதலைப் புலிகள் தமது மனதை மாற்றிக்கொள்வார்கள் என்று எண்ணுகின்றேன்.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளோடு நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து பி.பி.சிக்கு தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாங்கள் உள்ளூர் மட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் நடைபெற இருக்கின்ற சந்திப்புக்கள் ரத்துச் செய்ததையிட்டு வருத்தம் அடைகிறோம். ஏனென்றால் உள்ளூர்த் தலைவர்கள் சந்தித்துப் பேசுவது இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த விடயம் எங்களுக்கு மாத்திரமல்ல, போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் இரண்டு தரப்பினருக்கும் சிக்கலாக்கியுள்ளது. என்று குறிப்பிட்டார்.





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

# புதிய அரசியல் கட்சி அமைக்க நடிகர் விஜயகாந் முயற்சி!

## ரசிகர் மன்றத் தலைவர்களுடன் முக்கிய பேச்சு



(சென்னை)

நடிகர் விஜயகாந் புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளார். இது குறித்து பேச்சுக்களை நடத்துவதற்காக - மாவட்ட ரசிகர் மன்றத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய அரசியல் கட்சி அமைப்பது குறித்து நாளைமறுதினம் விஜயகாந்திற்கு சொந்தமான ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் ரசிகர் மன்றத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போது புதிய அரசியல் கட்சிக்கு வைக்கவேண்டிய பெயர், கட்சியின் கொடி என்பன குறித்து விரிவாக ஆராயவுள்ளார்.

தமிழ் கழகம், தமிழ் முன்னேற்றக் கழகம், தமிழ் திராவிட கழகம், தமிழ் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய 4 பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ரசிகர் மன்றத்திற்கு தற்போது உள்ள கொடியினை புதிய கட்சிக்குப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, அன்புமணி அமைச்சராக பதவியேற்றதை விஜயகாந் விமர்சித்ததையடுத்து, பா.ம.க கட்சியினிடையே ஏற்பட்ட முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பா.ம.க முடிவுசெய்துள்ளது.

இத்துடன் விஜயகாந்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்களை கைவிடுமாறு - தொண்டர்களுக்கு ஜி.கே.மணி பணிப்புரை விடுத்துள்ளார்.

## செங்குந்தா இந்துக் கல்லூரியில்

# வாகைமரம் தறித்த நபர் நேற்று பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

செங்குந்தா இந்துக் கல்லூரியில் வாகைமரம் தறிப்பதில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட சந்தேக நபரை யாழ்.நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுதலை செய்தது.

செங்குந்தா இந்துக் கல்லூரியில் நீண்டகாலமாக நின்ற வாகைமரம் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் நடைபெற்றது. அவ்வேளை வாகைமரத்தைத் தறித்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்ட நபரை பிணையில் விடுவிக்க நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வாகைமரம் தறிப்புத் தொடர்பாக அந்தப் பகுதி கிராமசேவையாளர் மேற்கொண்ட விசாரணைகள், அதிபரது நிலைப்பாடு, கல்விப் பணிப்பாளரது விசாரணை அறிக்கை முதலானவற்றை நீதிமன்றத்திற்கும் சமர்ப்பிக்குமாறு நீதிவான் தெரிவித்தார்.

(ப)

## பல்கலைக்கழக பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் அடுத்தமாதம் 6 ஆம் திகதி முதல் நடைபெறும் என்று கலைப்பீட உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.

## திருத்தப்பட்ட இரு பஸ்கள் பாடசாலை சேவையில்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சேவையை நடத்தவென மேலும் இரண்டு பஸ்களை வடபிராந்திய போக்குவரத்து சபை நேற்றுமுதல் சேவைக்கு விட்டுள்ளது.

இந்த இரு பஸ்களும் நேற்றுக் காலை 11 மணியளவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளையினால் சேவைக்கு விடப்பட்டது.

புதிய இயந்திரத்தைக் கொண்டு ஏற்கனவே இருந்த இரண்டு பஸ்களின் உடற்பாகங்களைக் கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இரு பஸ்களும் சேவையில் ஈடுபடுவதற்கு உழைத்த கோண்டாவில் டிப்போவில் பணிபுரியும் பொறியியலாளர்களையும் க.கணேசபிள்ளை பாராட்டிப் பேசினார்.

மேலும் ஒன்பது பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.(ப)

# பேரவையின் உறுதிமொழியை அடுத்து ஊழியர் போராட்டம் கைவிடப்பட்டது!

## ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் பல்கலைக்கழக பேரவையின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டுள்ளது என பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

ஊழியர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கைகள் யாவற்றையும் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் படிப்படியாக நடைமுறைப்படுத்துமென யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுதியளித்ததையடுத்தே ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

இது தொடர்பாக ஊழியர் சங்கம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் பற்றி எடுக்கப்பட்ட முடிவுகளை பல்கலைக்கழக நிர்வாகம் செயற்படுத்தும்வரை வேலைநிறுத்தப் போராட்டத்தை இடைநிறுத்துவதாக நேற்றுக்காலை 9.00 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சுமுகமான தீர்வினைப் பெற்றுத்தர உழைத்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச மாணவர் அவை, மனித நேய அமைப்புக்கள், அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம், தொழிற் சங்க கூட்டுக்குழு, மற்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் -

மேலும் ஏனைய தொழிற்சங்கவாதிகள், எமது பல்கலைக்கழக பிற தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கு.கஜேந்திரகுமார், செ.கஜேந்திரன் மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் செய்தி வெளியிட்ட ஊடகங்கள் என்பவற்றுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## கருச்சிதைவு செய்த பெண் பிணையில் விடுதலை

சட்டவிரோதமாக கருச்சிதைவு மேற்கொண்ட கைம்பெண் ஒருவருக்கு எதிராக - பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்கில் 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 5 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

புலோலி கிழக்கு சாந்தா தோட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு எதிராகவே குறித்த வழக்கை பருத்தித்துறை பொலிஸார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். (122)

ராஜா யாழ்ப்பாணம்.
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
01 ஆம் திகதி வரை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி

(சி-2623)
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன்
நடித்த
படையப்பா
(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
முரளி, கௌசல்யா நடித்த
காலமெல்லாம் காதல் வாழ்க
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHPOSURE (சி-2621)

# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழ தேசியத் துணைப்படை

## தமிழீழம்

தமிழீழ தேசியத் துணைப் படைக்கு உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் முகமாக தமிழீழப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. வயதெல்லை :- 18 தொடக்கம் 25 வரை
2. உடற்தகமை :- தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம் :- ரூபா 8500/= மாதமொன்றிற்கு

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 23.06.2004 தொடக்கம் 30.06.2004 வரை சமூகம்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

**குறிப்பு:- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.**

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-2685)

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டும்!

## இதுவே ம.தி.மு.கவின் நிலைப்பாடு என்கிறார் வைகோ



(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை - தேவையில்லை என்பதே ம.தி.மு.கவின் கருத்து. எனினும், தடையை நீக்கவேண்டும் என்று நாங்கள் கோரவில்லை என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கடந்த சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

பொடா சட்டத்தை ரத்துச்செய்வதற்கான நடைமுறைகள் நடந்து வருகின்றன. இதற்கு எத்தனை நாட்களாகும் என்று தெரியாது. பொடா சட்டம் வாபஸ் பெறப்படுவது என்பது ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவாகும்.

பிரதமர் மன்மோகன்சிங்கின் உரை திருப்தியளிக்கிறது. அமைச்சரவை சேர்வதில்லை என்கின்ற முடிவல் மாற்றமில்லை. சேதுசமுத்திரத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். இதற்குப்போதிய நிதியை ஒதுக்க வேண்டும். இந்தத் திட்டம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கும் என்று தமிழக அரசு கருதினால், அதனை வெளிப்படையாகச் சொல்லட்டும்.

புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற கருணாவுக்கு இலங்கை அரசு ஆதரவளித்துவருவதாக செய்திகள் வெளிவருகின்றன.

சமாதானப் பேச்சுக்களை சீர்குலைப்பதற்காக சந்திரிகா அரசு செயறபடுகின்றது என முன்னரே நான கூறியிருந்தேன்.

சந்திரிகா அரசின் சுயரூபம் இப்போது தெரிந்துவிட்டது. இலங்கை இனப்பிரச்சினையை சமாதானப் பேசசுக்கள்மூலம் தீர்க்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெற வேணடும் என தமிழர்கள் எல்லோரும் நினைக்கிறார்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவவேண்டும். புலிகள் மீதான தடையை இந்தியா நீக்கவேண்டும் என்பதே ம.தி.மு.கவின் நிலைப்பாடு.

ஆனால், தடையை நீக்கவேண்டும் என நாங்கள் கோரவில்லை.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. வரும் காலங்களில் புலிகள் மீதான தடையை இந்தியா நீக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. பழைய விடயங்களை நினைத்துக்கொண்டிருந்தால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என வைகோ தெரிவித்தார்.

### ராஜீவ் கொலைவழக்கின்

## தூக்குத் தண்டனைக் கைதிகளை பழ.நெடுமாறன் பார்வையிட்டார்

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை, வேலூர் மத்திய சிறையில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் சந்தித்துப் பேசினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் ஆதரித்துப் பேசியதற்காகப் பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, பல மாதங்கள் சிறையில் வைக்கப் பட்டிருந்த நெடுமாறன் - கடந்த சிலமாதங்களுக்கு முன்பு பிணையில் வெளிவந்திருந்தார்.

இந்த நிலையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் ஆயுட் தண்டனை பெற்ற கைதிகள் ரொபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரையே வேலூர் சிறையில் நெடுமாறன் சந்தித்துப் பேசினார். மகளிர் சிறையில் உள்ள முருகனின் மனைவி நளினியையும் நெடுமாறன் சந்தித்துப் பேசினார்.

## சிறுவர் பாதுகாப்புத் தன்மை இலங்கையில் அரிதாம்

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக 60 ஆயிரம் சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளார்கள் என யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பெருந்தொகையான சிறுவர்கள் பெற்றோரை இழந்திருக்கும் அதேவேளை, இலங்கையில் கடந்த காலப்பகுதிகளில் சுமார் 50, ஆயிரத்திற்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 6 மாத காலத்தில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்ட 90 பேரில் அதிகமானோர் 40 வயதிற்கும் குறைவானவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## பழைய ரூபா நோட்டுக்களை புழக்கத்தில்விடத் தீர்மானம்

(கொழும்பு)

20 கோடி ரூபா பெறுமதியான 500 மற்றும் 1000 ரூபா நோட்டுக்களை மீண்டும் பயன்படுத்த இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் உற்பத்தி வீழ்ச்சியால், பணத்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

இதனைத் தவிர்ப்பதற்காகவே மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த நடவடிக்கை மூலம் தற்போதுள்ள பணவீக்கம் இரண்டுமடங்காவதற்கு வாய்ப்பிருப்பாதாகக் கூறப்படுகிறது. (01)

### சலுகையைப் பயன்படுத்தியே

## ஜே.வி.பி -எம்.பி தனது மகனை தேசிய பாடசாலையில் சேர்த்தார்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய தனிப்பட்ட சலுகையைப் பயன்படுத்தியே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிறேமசிறி மானகே - தனது மகனை மாத்தறை ராகுல கல்லூரியில் சேர்த்ததாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாடாளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தின்படி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது மகனை பொருத்தமான பாடசாலையில் தரம் 1 இலிருந்து தரம் 13 வரை சேர்ப்பதற்கு இடமுண்டு.

இதன்படியே எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செயற்பட்டார்.

இதுதொடர்பாக ஊடகங்கள் பெரிதாக எதனையும் வெளியிடவில்லை. ஆனால், சில அரசியல் வாதிகள் தமது பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பதற்காக இந்த விடயத்தைப் பெரிதாக்கியுள்ளனர்.

ஆனாலும், நாடாளுமன்ற உறுப்பினர் தனது மகனை குறித்த பாடசாலையிலிருந்து விலக்கியுள்ளாரெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

## விசேட பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இலங்கைத் துறைமுகங்களும்!

(கொழும்பு)

சர்வதேச துறைமுக அதிகார சம்மேளனத்தின் வழிகாட்டலின் கிழ், இலங்கையிலுள்ள துறைமுகங்களின் பாதுகாப்பு முழுமைப்படுத்தப்பட்டிருப்பதாக - துறைமுகங்கள் கப்பல் தொழிற்துறை அமைச்சின் செயலாளர் சர்வதேச துறைமுக அதிகார சம்மேளனத்துக்கு அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் துறைமுகங்களின் பாதுகாப்புப் பணிகள் - துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

எனினும், இப்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி அரசாங்கம் - துறைமுகங்களைப் பாதுகாப்பு பணிகளை மீண்டும் கடற்படையிடம் வழங்கியது.

சர்வதேச துறைமுக அதிகார சம்மேளனத்தின் 2002 ஆம் ஆண்டுத் தீர்மானத்துக்கமைய, எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி முதல் அனைத்து சர்வதேச துறைமுகங்களும் அந்தந்த நாட்டுக் கடற்படையினரின் பாதுகாப்பின் கழ் வரவேண்டும்.

இதன் அடிப்படையிலேயே கொழும்பு, காலி, திருகோணமலை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்கள் கடற்படையினரின் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி தொடக்கம் சர்வதேச சட்டத்தின்கீழ் சான்றிதழ்கள் இல்லாத கப்பல்கள் துறைமுகங்களுக்குள் செல்வதற்கு தடைவிதக்கப் பட்டுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து துறைமுகங்களையும், கப்பல்களையும் பாதுகாக்கும் நோக்குடனேயே, இந்தப் புதிய சர்வதேச சட்டம் அமுல் படுத்தப்பட்டிருப்பதாக சர்வதேச துறைமுகங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## சர்வதேச பாதுகாப்பு திட்டத்தில் இலங்கைக்கு முக்கிய இடம்!

### அமெரிக்க கடற்படைத்தளபதி கூறுகிறார்

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை இருக்கின்ற நிலையில், தறபோதைய உலகப் பாதுகாப்புத் திட்டத்தில் அது முக்கிய இடத்தைப் படித்துள்ளதாக, அமெரிக்காவின் கடற்படை நடவடிக்கைக்கான அதிகாரி அட்மிரல் மைக்முல்லன் தெரிவித்தார்.

பென்ரகனில் இலங்கைக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியுடனான சந்திப்பின் போதே மைக்முல்லன் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

இரு தளபதிகளும் சட்டவிரோத ஆயுத மற்றும் கப்பல்களை கடத்தல் மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான கடற்படை ஒத்துழைப்பை மேம்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடினர்.

சிக்கலான சர்வதேச பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கை தனது பங்களிப்பைச் செய்துவருவதையிட்டும் மைக்முல்லன் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். (01)

### கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில்

## ஊர்காவற்படை உறுப்பினர் உட்பட 19 பேர் காவல்துறையால் கைது

கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டின் பேரில், சேருநுவர பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட 19 பேர் தமிழீழ காவல்துறையால் கைதுசெய்யப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான சேருநுவரப் பிரதேசத்துக்கு அப்பாலுள்ள புனகல் எனப்படும் இடத்திலுள்ள கசிப்புக் கொட்டகை - தமிழீழக் காவற்துறையினரின் திடீர் சுற்றிவளைபபுக்குள்ளானபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களுள் ஒருவர் ஊர்காவற்படையைச் சேர்ந்தவர். இவர் வழக்கமாக இந்தக் கசிப்புக் கொட்டகைக்குச் சென்று வருவாரெனத் தெரியவருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் எல்லைப்புறத்தில் உள்ள கசிப்புக் கொட்டகைகளிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் கசிப்பு விநியோகம் இடம்பெற்று வருவதாக சேருநுவர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.டி.சி.வீரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, கைதுசெய்யப் பட்டவர்களை விடுவிக்குமாறுகோரி தமிழீழ காவற்துறையினரை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதனடிப்படையில் தண்டப்பணம் செலுத்தியதன் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

### கொரியாவுக்கு சென்ற

## செஞ்சிலுவைத் தொண்டர்கள் பதினொரு பேரைக் காணவில்லை

செஞ்சிலுவைச் சங்கப் பயிற்சிக்காக இலங்கையிலிருந்து கொரியாவுக்குச் சென்ற 11 பேர் - அந்நாட்டிலிருந்து காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்ட இந்த 11 பேரும் - இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல எனவும், இவர்களிடம் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தலா 6 லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டே இவர்களை கொரியாவுக்கு அனுப்பியுள்ளார். இவர்கள் கொரியாவிலிருந்து வேறு நாட்டுக்குச் சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் காரணமாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துககுக் கிடைக்கக்கூடிய பல உதவிகள் கிடைக்காமல் போவதற்குரிய வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக கொரிய நாட்டு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் - இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதுடன், இலங்கைக்கான கொரியத் தூதரகமும், கொரியாவுக்கான இலங்கைத் தூதரகமும் காணாமற் போனவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - இந்த 11 பேரையும் கண்டுபிடிக்குமாறு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவருக்கு விடுமுறை வழங்கப்பட்டு கொரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மயோன் முஸ்தபாவை பதவியேற்குமாறு கல்முனை நகரில் ஆர்ப்பாட்டம்

பதவிவிலகிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவின் இடத்திற்கு, மயோன் முஸ்தபாவை பதவியேற்குமாறு கோரி நேற்று முன்தினம் கல்முனை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஐக்கிய தேசியக் கட்சியின் கொத்தணி அமைப்பாளர்கள், பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்களால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை, முஸ்தபாவை பதவி ஏற்குமாறு வலியுறுத்தி நேற்றும் பகல் 11 மணியளவில் மயோன் முஸதபாவுடன் கல்முனை ம. மூத் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில்தான் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற உறுபபினர் பதவியை ஏற்பதா, இல்லையா என்பதனை அறிவிப்பதாகவும் தெரிவித்தார். (07)

# டென்மார்க்கை இலகுவாக வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது செக்!


(லிஸ்பன்)

போர்த்துக்கலின் லிஸ்பன் நகரில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் காலிறுதிப் போட்டியில் டென்மார்க் அணியை 3:0



என்ற அடிப்படையில் வீழ்த்திய செக்குடியரசு அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 4 ஆவது காலிறுதி ஆட்டத்தில் 'டி' பிரிவில் முதலிடத்தைப்பிடித்த செக்குடியரசு, 'பி' பிரிவில் 2 ஆவது இடத்தைப்பிடித்த டென்மார்க் அணிகள் மோதின.

ஆட்டத்தின் தொடக்கத்திலேயே டென்மார்க் அணி ஆதிக்கம் செலுத்தியது. அந்த அணிக்கு கோல்போட வாய்ப்புக்கள் கிடைத்தன. இதை டென்மார்க் வீரர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பதிலுக்கு செக்குடியரசு வீரர்களும் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஆட்டத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டது. ஆனாலும் முதற்பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் விழவில்லை.

2 ஆவது பாதி ஆட்டத்தில் செக்குடியரசு வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர்கள். அவர்களின் அபாரமான தாக்குதல் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து விளையாடமுடியாமல் டென்மார்க் வீரர்கள் திணறினர்கள்.

ஆட்டத்தின் 49 ஆவது நிமிடத்தில் செக்குடியரசு முதல் கோலைப்போட்டது. ஜான் கோலர் தலையால் முட்டி மிகவும் அற்புதமாக இந்தக்கோலை அடித்தார். தொடர்ந்து செக்குடியரசு வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பயனாக 63, 65 ஆவது நிமிடங்களில் செக்குடியரசு கோல் அடித்தது. இதனால் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலைபெற்றது. இந்த இரண்டு கோல்களையும் மிலன் பரோஸ் அடித்தார்.

அவரது ஆட்டம் நேற்று அபாரமாக இருந்தது. இந்த 2 கோல்கள் மூலம் பரோஸ் இந்தப் போட்டித் தொடரில் 5 கோல்கள் அடித்துள்ளார். அதிக கோல்கள் அடித்த வீரராக அவர் உள்ளார்.

டென்மார்க் அணியால் ஆட்டநேரம் முடியும்வரை பதிற்கோல் போடமுடியவில்லை. இறுதியில் செக்குடியரசு 3:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் செக்குடியரசு அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. இந்தப் போட்டியைக் காண 41 ஆயிரம் ரசிகர்கள் அரங்கில் கூடியிருந்தனர். போர்த்துக்கல், கிரீஸ், ஹொலண்ட் ஆகிய அணிகள் ஏற்கனவே அரை இறுதிக்குத் தகுதிபெற்றுவிட்டன.

செக்குடியரசு இந்தப் போட்டித் தொடரில் தொடர்ந்து 4 ஆவது வெற்றியை பெற்றுள்ளது. லீக் ஆட்டங்களில் ஹொலண்ட், லத்வியா, ஜேர்மன் அணிகளை வென்றிருந்தது. இந்தப் போட்டித்தொடரில் செக்குடியரசு தவிர எந்த



அணியும் 4 வெற்றிகளைப் பெறவில்லை.

ஐரோப்பியக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் ஒரு அரையிறுதியில் ஹொலண்ட் போர்த்துக்கல் அணிகள் மோதுகின்றன. இந்த



ஆட்டம் நாளை நடைபெறும்.

போர்த்துக்கல், கிரீஸ் அணிகள் முதன் முறையாக அரையிறுதிக்குத் தகுதி பெற்று உள்ளன. ஹொலண்ட் 1988 ஆம் ஆண்டிலும், செக்குடியரசு 1976 ஆம் ஆண்டிலும் (அப்போது செக்கோஸ்லோவாக்கியா இருந்தது. தற்போது செக்குடியரசு, சுலோவாக்கியா என 2 நாடுகளாகப் பிரிந்துவிட்டன) சம்பியன் பட்டம் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகையாளர்களை சந்திக்கக்கூடாதாம்!

### பாகிஸ்தான் வீரர்களுக்குத் தடை

கப்டன் இன்ஸமாம், அதி வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் அபிரோ உட்பட ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான உத்தேச அணி வீரர்கள் யாரும் பத்திரிகையாளர்களைச் சந்திக்கக்கூடாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது.

இந்த உத்தரவைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகரியார் கான், தலைமை நிர்வாகி ரமீஸ்ராஜா இருவரும் வெளியிட்டுள்ளதாகப் பாகிஸ்தான் தொலைக்காட்சி தெரிவித்தது.

கடந்த ஏப்ரல் மாதம் ராவல்பிண்டியில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியின்போது அக்தரின் உடற் தகுதி குறித்து எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து இந்த உத்தரவை வெளியிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஊடகங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை, பயிற்சியாளர் பொப் வூல்மர் மேலாளர் ஹருன்ரஷித் இருவரும் பார்த்துக் கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் நடந்த புராதன படகுப்போட்டி

(சென்னை)

உலகின் பழமைவாய்ந்த மெட்ராஸ் - கொழும்பு படகுப்போட்டி சென்னையில் நடந்தது. சென்னையில் பிரசித்திபெற்ற மெட்ராஸ் போட் கிளப் சார்பாகக் கடந்த 100 ஆண்டுகளாக மெட்ராஸ் - கொழும்பு படகுப்போட்டி நடத்தப்பட்டுவருகின்றது. உலகில் இந்த வகையான படகுப்போட்டிகளே மிகப்பழமை வாய்ந்தது.

இந்த ஆண்டு சென்னை, மெட்ராஸ் போட் கிளப் வளாகத்தில் நடந்தது. இந்தப் போட்டியில், இலங்கை வீரர்களும், இந்திய வீரர்களும் கலந்துகொண்டனர். இந்தப்போட்டியில், 'ஏ' ஸ்கல் பிரிவில் ரோஹித் ரவீந்திரா முதலாவதாகவும், 'பி' ஸ்கல் பிரிவில் ஜேம்ஸ் ஜோசப் முதலாவதாகவும் வந்து வெற்றி பெற்றனர்.

ஆண்கள் ஜோடி 'ஏ' பிரிவில் இலங்கையைச் சேர்ந்த துலக் அலுவிகார மற்றும் உஸமான் பதாரலியும் 'பி' பிரிவில் தேஜன் சொய்சாவும், தேவகா, சேவாவிராத்வியும் வெற்றி பெற்றனர்.

விளையாட்டு

## விம்பிள்டன் ரெனிஸ்

# நான்காவது சுற்றுக்கு தெரிவானார் செரீனா

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 3 ஆவது சுற்றில் ஸ்பெயினைச் சேர்ந்த செர்னாவை எதிர்கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-4, 6-0 என்ற நேர் செட்கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றார். 4 ஆம் நிலை வீராங்கனையான அமெய்லி மவ் ரஸ்மோ 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் லுட் மிலாவை (சுலோவாக்கியா) தோற்கடித்தார்.

5 ஆம் நிலை வீரரான ஹென்மன் (இங்கிலாந்து) 3 ஆவது சுற்றில் மொராக்கோ வீரர் ஆர்சியை எதிர்கொண்டார். இதில் ஹென்மன் 7-6 (8-6), 6-4, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்குத் தகுதி



பெற்றார்.

அவர் 4 ஆவது சுற்றில் அவுஸ்ரேலிய வீரர் மார்க் பிலிப் போசிசை எதிர்கொள்கிறார்.

இரட்டையர் பிரிவில் மகேஷ்பூபதி (இந்தியா) - மிரினி (பெலாஸ்) ஜோடி 3 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றது. இந்த ஜோடி 2 ஆவது சுற்றில் 7-5, 6-3 என்ற கணக்கில் ரேமண்ட் மார்ட்டின் (ஹொலண்ட்) ஜோடியைத் தோற்கடித்தது.

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டப் போட்டி!

### அரையிறுதி ஆட்டங்கள் ஆரம்பம்

வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம், கரும்புலிகள் நினைவாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், யாழ்.மாவட்ட அணியில் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கேற்கும் கழகங்களின் வீரர்கள் பங்குபற்றுவதாலேயே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன்படி இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் றோயல் விளையாட்டுக்கழகமும், கலைவாணி விளையாட்டுக்கழகமும் மோதவிருக்கின்றன. இதேவேளை இன்று இரவு 8.00 மணிக்கு சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்தது பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதும்.

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி; யாழ்.மட்டக்களப்பு அணிகள் தெரிவு

வடக்கு- கிழக்கு மாகாணமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு அணிகளும் தெரிவாகியுள்ளன.

கடந்த சனியன்று மன்னாரில் ஆரம்பமான மாகாணமட்டப் போட்டியில் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இரு மாவட்ட அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு அணி வவுனியா அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிற்பகல் யாழ்.மாவட்ட அணிக்கும் திருகோணமலை மாவட்ட அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்மாவட்ட அணி, திருகோணமலை மாவட்ட அணியை 2:1 என்ற கோல கணக்கில் வெற்றியீட்டியது. (201)

# முத்தரப்பு ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்து, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவு அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ஒருநாள கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடந்து வருகிறது இங்கிலாந்து, நியூஸிலாந்து இடையோன தொடரின் முதல்போட்டி, மழை காரணமாக ஒரு பந்துகூட வீசாத நிலையில் ரத்தானது. மேற்கிந்தியத் தீவு அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையேயான இரண்டாவது போட்டி மைதானத்தின் ஈரம் காரணமாக ரத்தானது.

தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் நொட்டிங்ஹாமில் உள்ள டிரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் நடந்தது. இதில் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவு அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவு அணி, இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

மேற்கிந்தியத் தீவுப் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசியதனால் இங்கிலாந்து வீரர்கள் விரைவில் சுருண்டனர். பிராட்ஷா வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரில் வீசிய பந்தில் டிரஸ்கோதிக் ஓட்டமெதுவும் எடுக்காமலும், அடுத்த ஓவரில் மைக்கல் வோகன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து ஜோடிசேர்ந்த ஜோன்ஸ், ஸ்ட்ராஸ் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்கு 82 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஜோன்ஸ் (35) ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 38.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களில் சுருண்டது.

சிறப்பாக ஆடிய ஸ்ட்ராஸ் 43 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கிந்தியத் தீவு தரப்பில் பிராவோ 3, லாசன் 2, ராம்பவுல் 2, பிரட்ஷா 2, ஸ்மித் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 148 ஓட்டங்கள எடுத்தால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவு அணி களமிறங்கியது. சுலபமான இலக்கு என்பதால் தொடக்க ஆட்




டக்காரர்கள் மிகவும் மெதுவாக ஆட்டத்தைத் தொடக்கினர்.

முதல் விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் சந்தர்போல் 20 ஓட்டங்களைப் பெறற நிலையில் அனடர்சன் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து ஸ்மித் (6), சர்வான் (13) ஆட்டமிழக்க, மேற்கிந்தியத் தீவு அணி 3 விக்கெட் இழப்பிற்கு 93 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து வந்த கப்டன் லாரா பவுண்டரியுடன் ஆட்டத்தைத் தொடக்கினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிவந்த கைல் அரைச்சதத்தைக் கடந்தார். இந்தஜோடி கடைசி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றி அடையச்செய்தது. மேற்கிந்தியத்தீவு அணி 33 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களுடன், 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

விரைவாக ஓட்டங்களைக் குவித்த லாரா 29 பந்துகளில் 32 ஓட்டங்களும், கைல் 60 ஓட்டங்களும் குவித்தனர்.

இங்கிலாந்து தரப்பில் அன்டர்சன் 2, மெக்ராத் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவு அணி 9 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்தது. 6 புள்ளிகளுடன் நியூஸிலாந்து அணி இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து அணி 3 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் உள்ளன.

# எழுத்தாளர்கள் சமுதாயத்தில் நல்லதொரு சீர்திருத்தவாதிகளாக செயற்படவேண்டும்

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் க.குணராஜா உரை

சொற்களை நல்லமுறையில் ஒழுங்குபடுத்தி சீர்செய்து அதனை சமுதாயத்திடம் ஒப்படைக்கும் பணியே இலக்கியப்பணி ஆகும். சொற்களை சொல்வதெல்லாம் இலக்கியமல்ல. நேரடியாக சொல்லாமல் மறைமுகமாக மக்களுக்கு கருத்தைத் தெரிவிப்பவரே சிறந்த இலக்கியவாதி என கோப்பாய் சிவம் எழுதிய தார்மீக கோலங்கள் என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை நிகழ்த்திய எழுத்தாளர் க.குணராஜா தெரிவித்தார்.

இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் அதிபர் இதுரை எங்கரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் - சிறுகதை எழுத்தாளர் கோப்பாய் சிவமும் சிறந்த சொற்பிரயோகத்தில் அனைவருக்கும் விளங்கக் கூடியவிதத்தில் சிறுகதைகளை எழுதியுள்ளார். ஆனால் இக்காலத்தில் காலையிலிருந்து மாலை வரை தொலைக்காட்சியை ரசிப்பதன் மூலம் சிறுகதை நூல்கள் வாசிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. வாசகர்கள் நூல்களை வாசிகக வேண்டும். அப்போதுதான் நூல் வெளியிட்டதன் பூரணத்தன்மையைப் பெற முடியும்.

இலக்கியங்கள் பொழுது போக்குக்காக வாசிக்கப்படுவதில்லை. சிலர் தங்களின் சொற்பநேர மகிழ்ச்சிக்காக இலக்கியங்களை வாசிக்கிறார்கள். ஒருசிலர் தாம் அறியாத விடயங்களை அறியவேண்டும் என்ற ஆவலில் வாசிக்கிறார்கள். ஆனால் இலக்கியங்கள் யாருக்காக படைக்கப்படுகிறதோ அது அவர்களைச் சென்றடையவேண்டும்.

அப்போதுதான் சமுதாய விழிப்புணர்வு ஏற்படும். தேசியத் தலைவர் வே.பிரபாகரனே கூறியுள்ளார். தான் இரண்டு கதைகளை வாசித்ததன் மூலமே தனக்கு விடுதலை உணர்வு ஏற்பட்டதென்று, அதாவது ரா.சு.நல்ல பெருமாள் எழுதிய கல்லுக்குள் ஈரம் என்ற நாவலும், சாண்டில்யன் எழுதிய கடல்புறா என்ற இரண்டு இலக்கிய நூல்களே.

அவை உரியவர்களை சென்றடைந்தால்தான் உரியபலனை எதிர்பார்க்கலாம். சிலவற்றை எழுதக் கூடாது என்ற கோட்பாட்டைக் கடந்து எஸ். தம்பித்துரை என்ற எழுத்தாளர் "தீ" என்ற நாடகத்தை எழுதினார். அவர் எதை பேசக்கூடாதோ அதையே எழுதினார். அதனால் அந்த நாடக நூலுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. எனவே எழுத்தாளர்கள் சமூக சீர்திருத்தவாதிகளாக செயற்பட வேணடும் எனத் தெரிவித்தார்.

நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் குறிப்பிடுகையில் -

இலக்கியம் என்பது கலை. கலை என்பது மனிதனின் திறமைகளை வெளிப்படுத்தும் கருவியாகும். சிறுகதைகள் எழுதுவதன் நோக்கம் மனிதனது மனத்தை உண்மையாக மாற்றி மனிதப்பண்புடன் வாழ செல்வதேயாகும். கோப்பாய் சிவம் எழுதும் கதைகளும் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவனவாகும். இதற்கு அவரின் தந்தையான பண்டிதர் பஞ்சாட்சரசர்மாவும் ஒரு பழம்பெரும் எழுத்தாளராக காணப்பட்டதால் அவரின் குடும்பமும் இலக்கியத்துடன் பின்னிப்பிணைந்தது எனலாம்.

கல்வியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி மதிப்பீட்டுரையில் கூறும்போது -

டானியல், டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், வரதர் ஆகியோர் வரிசையில் கோப்பாய் சிவமும் எழுத்துத்துறையில் சிறந்த பணியாற்றி வருகிறார். தேசிய மண்வாசனையை உணர்த்தும் அவரின் படைப்புக்கள் பல முதற்பரிசில்களை பெற்றுளளன. அதுவே அவரின் படைப்பிற்கான அங்கீகாரங்களாகும். எம்மால் இங்கு தெரிவிக்கும் கருத்துக்கள், சிந்தனைகள் யாவும் மதிப்பீட்டுரையாகவோ, ஆய்வுரையாகவோ அன்றி எழுத்தாளர்களின் ஒன்று கூடிய கருத்துப் பரிமாற்றமாகவே கொள்ளவேண்டும் என்றார்.

நூலாசிரியரின் ஏற்புரையுடனும் கலை இலக்கிய வட்ட பொருளாளர் ந.ஞானசூரியரின் நன்றியுரையுடனும் நிகழ்ச்சி நிறைவடைந்தது. (101)

# யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் நடத்தும் வீதி ஒழுங்குவிதி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ்.நகர போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் பாடசாலைகள் தோறும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் போக்குவரத்து விதிகள் சம்மந்தமான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் யாழ்.புனித சாளஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ்.நகர போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் இன்றுவரை இவ்வருடம் 58 பாரிய வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அநேக வீதி விபத்துக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவதாகவும், 18 வயதுக்கு குறைந்தவர்கள் வாகனத்தைச் செலுத்தும்போதே அதிகமான விபத்துக்கள் இடம்பெற்றதாகத் குறிப்பிட்டார்.

இனிவரும் காலங்களில் 18 வயதுக்கு குறைந்தவர்கள் வாகனம் ஓட்டிவரும் பொழுது அவர்களை கைதுசெய்து நீதிமன்றில் ஆயர் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பயணம் செய்தாலும் அவ்வாறே தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தனர்.

(58)

# சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மதிலை அகற்ற நடவடிக்கை

வலிகாமம் தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வடலித் தோட்டம் வைரவர் கோவிலடியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மதிலை அகற்றுவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட்டு வருகிறது.

வடலித் தோட்டத்திலுள்ள வீதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மதிலை அகற்றி அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே மானிப்பாய் பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனியார் ஒருவரால் அவரது காணிப் பாதுகாப்புக்கு இந்த மதில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (91)

# ஆசிய வங்கி நிதியுதவியுடன் மன்னாருக்கு புதிய மின்னிணைப்பு

(மன்னார்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்களுக்கும் மின் இணைப்புக்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரைச்சிப் பண்ணை, பூனைத்தொடுவாய், வேப்பம்குளம், பாவலன்பட்டுக்கொட்டு, குமணகிரி முதலான பகுதிகளுக்கே இந்த மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக 13 மில்லியன் ரூபா வரை செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணிகள் யாவும் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகவும் இந்த வருட இறுதிக்குள் இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வரும் என எதிர்பார்க்கப்படுவதாக பன்குளம் பிராந்திய மின்சாரசபை அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## தொழில் ஸ்தாபனங்கள் தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(சுதுமலை)

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கைத்தொழில் நிறுவனங்களும் அவை தொடர்பான விபரங்களும் பிரதேச சபை ஊடாக கோரப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பான விபரங்களை பிரதேச சபையின் உப அலுவலங்கள் ஊடாக அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 5 திகதிக்கு முன்னர் ஒவ்வொரு கைத தொழில் நிறுவனங்களும் தங்களது விபரங்களை அனுப்பி வைக்குமாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார்.

(91)

## ஞானசௌந்தரி இசை நாடகம்

(சுதுமலை)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் ஞானசௌந்தரி இசைநாடகம் ஜூலை மாதம் 9,10,11 ஆகிய திகதிகளில் மன்ற அரங்கில் தினமும் மாலை 7 மணிக்கு ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் தெரிவித்தார்.

(91)

## உள்ளூராட்சி வார செயற்திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு

(சுதுமலை)

இவ்வருடம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டிய செயற்திட்டங்களுக்கான ஒவ்வொரு பிரதேச செயலக உள்ளூராட்சி உதவியாளர்களுக்கும் தலா 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டே இந்த நிதியை ஒதுக்கியுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் இராசையா தெரிவித்ததாக மானிப்பாய் பிரதேச சபை அதிகாரி ஒருவா தெரிவித்தார்.

(91)

## மின்சாரத்தடையால் பணிகள் ஸ்தம்பிதம்

யாழ்.நகரப் பகுதியில் திடீர் திடீரென ஏற்படும் மின்தடையால் பொது மக்கள் உட்பட வர்த்தக கைத்தொழில் நிறுவனங்கள் என்பன பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்தனர்.

திடீரென ஏற்படும் மின் தடையால் வீட்டுப்பாவனைப் பொருட்கள் பழுதடைவதுடன் வியாபார மற்றும் கைத் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் மின்சாரத் தடையால் நாளாந்தப் பணிகளைச் செய்ய முடியாது இருப்பதாகவும் தெரிவித்தனர்.

## மஹா கும்பாபிஷேகம்

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரியில் அமைக்கப்பெற்ற ஸ்ரீ விபுலவிநாயகர் ஆலய நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை ஆரம்பமாகி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

## மலையக ஜீவாவின் மணிவிழா

மலையக ஜீவாவின் மணிவிழா சிறப்பு நிகழ்வும், திருந்திய அசோகன் நூல் வெளியீட்டு விழாவும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி கண்டி ஸ்ரீ புஸ்பதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மணிவிழாக் குழுத் தலைவர் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கப்பல் கூட்டுத்தான பணிப்பாளர் அல்ஹாக் ஹாசிம் உமர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

## வலி.தென்மேற்கு பிரதேச சபையினரால் பொருட்கள் அன்பளிப்பு

(சுதுமலை)

பண்டதரிப்பு பிரான்பற்று கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறிய குடும்பங்களுக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் பற்பசை, பற்தூரிகை, சவர்க்காரங்கள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (91)

## பச்சிலைப்பள்ளியில் வீதிகள் புனரமைப்பு

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் நான்கு வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

முகாமில் - கோயில்வயல் வீதி, சோரன்பற்று வீதி, தம்பகாமம் - மாமுனை வீதி, முல்லையடி - திராய்க்கரை வீதி என்பனவே அந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (122)

## பன்னாலையில் கும்பாபிஷேகம்

(உடுவில்)

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய நவகுண்ட பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் ஜூன் மாதம் 4 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கரியைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பக்தர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை முதல் மாலை வரை இடம்பெறும்.

## சிறப்புற நடைபெற்ற முன்பள்ளி கண்காட்சி

(நெல்லியடி)

வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையின் ஆதரவுடன் இணைந்து நடாத்தும் முன்பள்ளிக் கண்காட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியால்யத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் ஆரம்பித்து வைதததார்.

இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார் பொதுச் சுடரை நாட்டுப்பற்றாளரும் மாவீரர் வைத்தியின் சகோதரர் செ.புனிததாஸ் ஏற்றிவைத்தார். வடமராட்சி வலய முன்பள்ளிக் கொடியை ஆசிரியை சுதாஜினி ஏற்றிவைத்தார்.

கண்காட்சிப் பொருள்கள் கரவெட்டிப் பிரதேசம், பருத்தித்துறைப் பிரதேசம் என இரு பிரிவுகளாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பருத்தித்துறைப் பிரதேசக் காட்சிப் பொருள் மண்டபத்தை வடமராட்சி வலயக் கலவிப் பணிப்பாளர் இ.செல்வரட்ணம் திறந்து வைத்தார். (13)

# மல்லாகம் பொதுச் சந்தையை புனரமைக்குமாறு கோரிக்கை

(உடுவில்)

வலி. வடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட மல்லாகம் பொதுச்சந்தை இதுவரை செயற்படாதுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மல்லாகம் சந்திக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தையில் உள்ள ஒரு கட்டத்தில் கூரை இல்லாதுள்ளது. அத்துடன் அதனருகில் உள்ள வேறொரு கட்டடத்தில் பயனற்ற பொருட்கள் காணப்படுவதால் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியாதிருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்தை இயங்காதிருப்பதால் தாம் அதிக தூரம் சென்று சுன்னாகம் சந்தையில் பொருட்களை வாங்க வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

எனவே, வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குட்பட்ட இந்தப் பொதுச்சந்தையை வெகு விரைவில் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற முறையில் புனரமைத்துக் கொடுக்க வேண்டியிருப்பதாக இந்தக் கிராம மக்கள் கோரியுள்ளனர். (101)

## வெளிவாரிப் பரீட்சை

யாழ்.பல்பலைக்கழக வெளிவாரிப்பரீட்சை பீடத்தினால் கலைமாணி பகுதி 1 பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குள் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பரீட்சை அலகுகள் பீடத்தில் பற்றுச் சீட்டை ஒப்படைக்குமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (72)



புலோலி மெதடிஸ்த மிசன் தமழ் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் அ.கமலநாதன் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். (17)




# கடலில் கணினி

உல்லாசப் பிரயாணிகள் கடற்கரைகளிலே உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பார்கள். அத்துடன், அவர்கள் கடலிலே படகுச்சேவை கூடச் செய்கிறார்கள். அவர்கள் சவாலாகச் செய்கின்ற படகுப் போட்டிகளில் தற்போது லப்டப் கணினிகள் பொருத்தப் பட்டிருக்கின்றது. இதற்குரிய கணினி வடிவமைப்பினை இன்ரெல் நிறுவனம் செய்திருக் கின்றது. இதன் காரணமாக உல்லாசப் பயணப் பொழுதில் அவர்கள் தங்களுடைய்ய தொழில்களைச் செய்யக்கூடியதாக இருக்கின்றது.




இந்தவகையான படகுகள் 9 அடி மற்றும் 4 அங்குல நீளமானவை. இவை சிலிக்கன், பிவிசி, அலுமினியம் ஆகியவற்றினால் உருவாக்கப்படுகின்றன. இது 1.7 ஜிஎச்சற் திறமையும் 80 ஜிபி காட் டிரைவினையும் கொண்ட கணினியாகும்.

மொபைல் தொலைபேசி மற்றும் விடியோ ஆகியனவும் காணப்படுகின்றன.

இது சோலர் சக்திமூலம் இயங்கக்கூடியதாகவும், நீர் உள்ளே செல்லமுடியாத தடையைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

இது கிட்டத்தட்ட 2.3 கிலோகிராம் நிறையையும் கொண்டது.

# மெலியும் பறவைகள்

கடற்பறவைகள் தற்போது மிகவும் மெலிந்து காணப்படுகின்றன. ஏனெனில், அவற்றுக்குக் கிடைக்க வேண்டிய போதியளவு புரதச்சத்து மீன்களிலிருந்து கிடைப்பதில்லை. கடலில் வாழ்கின்ற மீனினங்கள் கால நிலை மாற்றங்கள் காரணமாக - வேறு இடங்களுக்கு மாறிச் சென்றுவிடுகின்றன.



விஞ்ஞானிகள் செற்லாந்து என்ற தீவில் செய்த ஆராய்ச்சிகளின்படி, கடற்பறவைகள் மெலிந்து வாடியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது. தற்போது கடலின் வெப்பம் அசாதாரணமாக அதிகரித்து வருகின்றது. வெப்பத்தினைப் பொறுக்க முடியாத மீனினங்கள் கடலின் மேற்பரப்புக்கு வராது அடியிலேயே தங்கிவிடுகின்றன. ஒரே நேரத்தில் 5 மீன்கள் உண்ணக்கூடிய பிறாங்டன் பறவைகள் தற்போது ஒன்று அல்லது இரண்டு மீன்களைக்கூடப் பெறமுடியாது திண்டாடுகின்றன. இதற்கிடையில் இந்தப் பறவை இனங்கள் அழிந்து கொண்டுவருவதாகவும், இப்படியே போனால் அரிதான இந்தப் பறவை இனங்கள் எதிர்காலத்திலே இருக்கவே முடியாதெனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

# தனியார் துறையின் ரொக்கெட்

இதுவரைகாலமும் அரசாங்கங்களே விண்வெளி ஓடங்களை அந்தந்த நாடுகளிலிருந்து விண்வெளிக்கு ஏவிவந்தன. ஆனால், இப்பொழுது தனியார் துறையினர் விண்வெளிக்கு ரொக்கெட்டுக்களை அனுப்பி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளக்கூடிய காலம் கனிந்து வந்துள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த விமான கண்டுபிடிப்பாளர் பேர்ட்றூட்டன் தன்னுடைய சொந்த விண்வெளி ஓடமூலம், ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகப் புறப்பட இருக்கிறார். கிட்டத்தட்ட 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை இதற்காக அவர் செலவளிக்கிறார். இதேபோல வேறுபல கண்டுபிடிப்பாளர்களும் அரச உதவியில்லாமல் விண்வெளிப் பயணத்தினை மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். உண்மையில் தனியார் துறையினருடைய இந்த முயற்சிக்கு ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.





இதேவேளை - வைற்நைட் என்பவரை ஏற்றிக்கொண்டு ஒரு விண்வெளி ஓட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இருக்கிறது. அவரும் அரச உதவியற்ற ஒரு தனியார்துறை ஆராய்ச்சியாளர்தான். ஆனால், இவருடைய முயற்சிகள் வெற்றியளிக்காது என சில நிபுணர்கள் கருதுகிறார்கள். ஏனெனில், இவர் பாவிக்கும் எரிபொருள் அவ்வளவாக நல்லதில்லை எனவும், இது விண்வெளி ஓடங்களை நடுவானில் வைத்து வெடிக்கவைக்கும் எனவும் கருதுகிறார்கள்.

ஆனால், இவர்களின் இந்த முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

# சமுத்திரங்களின் பாதுகாப்பு

ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு கூட்டம் - விஞ்ஞானிகள் சமுத்திரத்திலே காணப்படுகின்ற விலை மதிக்கமுடியாத உயிரினங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 14 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சமுத்திரங்கள்மூலம் வருமானமாகக் கிடைப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், ஒரு குறித்த வலையமைப்பு இல்லாத மீன்பிடி, இந்த வருமானத்தைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. எல்லா நாடுகளிலும் ஒன்றிணைந்து சமுத்திரங்களில் உள்ள உயிரினங்களை பாதுகாக்கும் திட்டத்துக்கு கைகொடுத்து உதவினால், 2012 ஆம் ஆண்டளவில் கடல்களெல்லாம் செல்வங் கொழிக்கின்ற இடங்களாக மாறிவிடும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.



இதற்கிடையில் அமெரிக்காவில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, கடல்வாழ் உயிரினங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைவானதாகவும், அத்துடன் - மனிதர்களுடைய உணவுத்தேவைகள் முற்று முழுதாக கடலையே நம்பியிருப்பதாகவும கூறப்படுகிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒரு கட்டுப்பாடற்ற சமுத்திர மற்றும் கடல் உயிரினங்களின்பிடிப்பு அதிகரித்து வருகிறது. இதுவும் சர்வதேச கடற்பரப்பில் மீன்களின் எண்ணிக்கை குறைவதற்குரிய ஒரு காரணமாக அமைகிறது.

# தலை கவனம்



பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிள்ளைகள் விளையாடும் பொழுது, விழுந்து தலையில் அடிபடும் பல சந்தர்ப்பங்கள் தற்போது காணப்படுகின்றன. இது அவர்களுடைய நடத்தைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது பெரும்பாலும் மாணவர்களுடைய கல்வியைப் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. தலையில் தாக்கப்பட்ட பிள்ளைகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, அவர்களிடம் பேச்சுக்குறைபாடுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

ஒத்த இயல்புகளைக் கொண்டு காணப்படுகின்ற இரட்டை மாணவிகளில் ஒரு மாணவிக்குத் தலையில் அடிபட்டது.

அதிலிருந்து அந்த மாணவியினுடைய நடத்தையில் மற்ற மாணவியுடன் ஒப்பிடக்கூடியளவுக்கு வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இதற்கு முக்கிய காரணம் - மூளைக் கலங்களினுடைய அதிர்ச்சிதான் என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். இதன் காரணமாகப் பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமல்ல, பெற்றோர்கள்கூட இந்தப் பிள்ளைகளால் சிரமப்படுகின்றார்கள். ஏனென்றால், இந்தப் பிள்ளைகளுடைய உணர்ச்சிகள்கூட அடிக்கடி ஒரு வித்தியாசமானதாக இருக்கின்றன. பெற்றார்கள் பிள்ளைகளின் கல்வியில் கவனமாக இருக்கிறார்கலோ இல்லையோ அ்வர்களின் தலைகளில் கவனமாக இருக்கிறார்கள்.

## திரை விமர்சனம்

### மானஸ்தான்

மெகா ஸ்ரார் சரத்குமார் நடித்தும் கூட இந்தப்படம் மனதில் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. கதை, திரைக்கதை மிகவும் பலவீனமாக இருப்பதே இதற்கான காரணமாகும்.

ஜாதி வெறிகொண்ட பெரிய பண்ணையாளரான விஜயகுமாரின் புத்திரர் கள் சரத்குமார் மற்றும் அப்பாஸ். அப்பாஸ் கல்லூரி மாணவன். சரத்குமார் கிராமத்தில் நில, புலன்களைப் பார்த்துக் கொள்கின்றார். சாக்ஷி, சரத்குமாரின் முறைப்பெண்ணாக வருகின்றார். விஜயகுமாரின் அண்ணன் "காகா" ராதாகிருஷ்ணனின் மகன்கள் மன்சூர் அலிகான் உள்ளிட்ட மூனறுபேரும், விஜயகுமாரை அழிக்க நினைக்கின்றார்கள். இதற்கிடையில் வழக்கமான பழைய மசாலாவாகிய சரத்குமார் விஜயகுமாரின் மகனில்லை என்ற விடயம் தெரியவர, ஜாதிவெறி கொண்ட விஜயகுமாரால் சரத் வீட்டை விட்டுத் துரத்தப்படுகின்றார். இதனால் முறைப்பெண் சாக்ஷியையும் இழக்கின்றார். விஜயகுமார் மனம் மாறினாரா? சரத்குமார் மீண்டும் குடும்பத்துடன் இணைந்தாரா என்பதுதான் மீதிக்கதை.



பாசம், காதல், வீரம், சோகம் என சரத்குமார் நடிப்பில் கலக்கியிருக்கின்றார். பலபடங்களில் நடிப்பினைக் கோட்டைவிட்ட சாக்ஷி "மாமா மாமா" என தனக்கும் நடிக்கத் தெரியும் என இந்தப் படத்தில் நிரூபித்திருக்கின்றார்.

சுஜாதா வழக்கம்போல தனது "தாய்" பாத்திரத்தை நன்றாகவே செய்திருக்கின்றார். "காகா" ராதாகிருஷ்ணன் தம்பி குடும்பத்தின்மேல் காட்டும் வில்லத்தனமான பாடம் நன்றாக இருக்கிறது. வில்லன் மன்சூர் அல்கானைப் படத்தில் பாழடித்து விட்டார்கள். வடிவேலு என்ன உங்க நகைச்சுவைப் பேச்சு தீர்ந்து போச்சா?

இசை எஸ்.ஏ.ராஜ்குமார் மற்றும் கிச்சாஸின் ஒளிப்பதிவு பெரிதாகக் கூறுவதற்கில்லை. "மானஸ்தான்" சரத்குமாருக்கு மானம் கப்பலேறிவிட்டது.

## அற்புதமான மூவி கேம்கள்

உலகளாவியரீதியில் முதற்தரக் கையடக்கத் தொலைபேசி நிறுவனமாகிய நொக்கியா, தற்போது தன்னுடைய கைத்தொலைபேசிகளில் டிஸ்க் போடக்கூடிய விடியோக் கேம்களைப் புகுத்தியிருக்கிறது.



கடந்த வருட இறுதியில் சந்தைக்கு வந்த இந்தவகைத் தொலைபேசிகள் தற்போது உலகளாவிய ரீதியில் குறிப்பாக ஆசிய நாடுகளில் அதிகம் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

என்கேஜ் கியூடி என்ற வகையான இந்த மொபைல் போன்கள் - கிட்டத்தட்ட மலிவு விலையுடையவையாக, போலியானதாக விற்பனையாகின்றன. இதன் காரணமாக, உண்மையான போன்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றன.



இதில் எவ்.எம். வானொலியில் காணப்படுகின்றது. அத்துடன், 20 விளையாட்டுக்கள் கைத் தொலைபேசியிலே காணப்படுகின்றன. கலர்த்திரை, மொனோ ஒலியமைப்பு, விடியோ ஆகியனவும் காணப்படுகின்றன. இது ஏறக்குறைய 143 கிராம் நிறையுடையது.

இது துல்லியமான அழைப்பொலிகளையும் கொண்டது. அத்துடன், இன்ரநெட் வசதியும் கொண்டது. இந்த வகையான தொலைபேசிகளைச் சிறுவர்கள் கண்டால் விடவேமாட்டார்கள்.

## பற்றரிக் கார்

மின்சாரத்தினால் மட்டும் இயங்கக்கூடிய கார்கள் தற்போது ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அதிகம் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இவற்றின் வேகம் மணிக்கு 30 மீற்றர்தான். ஏனெனில், அதன்மேல் வேகத்தினை அதிகரிக்கக் கூடியவாறு மின்சார சக்தியால் முடியாதுள்ளது.

ஐரோப்பாவில் இந்த வகையான கார்களை இறக்குமதி செய்யும் நிறுவனமாக இசற். ஈ. வி நிறுவனம் காணப்படுகின்றது. மக்கள் இந்த வகையான கார்களை வாங்குவதற்குப் பின் நிற்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் இதனுடைய சிறிய அளவு மற்றும் வேகக் குறைவு ஆகியன முக்கிய சில காரணங்களாகக் கருதப்படுகின்றன. இந்த வகையான கார்களுக்கு வீதிக் கட்டணம் மற்றும் நிறுத்தற் கட்டணங்கள் ஆகியன இலவசமாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு இருக்கைகள் கொண்ட கார் 7000 ஸ்ரேலிங் பவுண்களாகவும் 4 இருக்கைகள் கொண்டது. சற்றுக் கூடியவிலையிலும் விற்பனையாகின்றன. ஆனால், வலதுபக்கமாக ஓட்டக்கூடிய கார்களே தற்போது உள்ளன. இதனால், கிடைக்கக்கூடிய ஒரு நன்மை, பெற்றோல் செலவு மிச்சம்.



## நுரையீரல் மாற்றுச் சிகிச்சை



புகைப்பிடித்தல் மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நுரையீரல்களை மாற்றியமைக்கும் சத்திரசிகிச்சைகள் - ஆரம்பத்தில் தோல்வியில் முடிந்தாலும், தற்போது வெற்றியளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நுரையீரல்களை மாற்றும்போது, அவை செயற்கை நுரையீரல்களாக இருக்கின்றன. இவை நோய்களிலிருந்து தப்பக்கூடியனவாகவும், கூடியகாலம் உயிர் வாழக்கூடியதாகவும் இருக்கின்றன என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். 14 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் செய்யப்பட்ட நுரையீரல்மாற்றுச் சிகிச்சைக்கும், தற்போது செய்யப்படுகின்ற நுரையீரல் மாற்றுச்சிகிச்சைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. ஒவ்வொருவருடைய நெஞ்சறை மற்றும் பிரிமென்தகடு ஆகியவற்றைப் பொறுத்து, செயற்கை நுரையீரல்களின் அளவுகள் அமைகின்றன.

ஆனால், இதய மாற்றுச் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்த 25 ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தினைக் கேம்பிறிட்ஜ் பப்வோர்த் வைத்தியசாலை கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 1000 நோயாளிகள் பயன்பெற்றிருக்கின்றார்கள். ஆனாலும், நுரையீரல் மாற்றுச்சிகிச்சை சற்றுக் கடினமாகின்றது.

## புற்றுநோய்க்கு சிகிச்சை

இங்கிலாந்திலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தில் விஞ்ஞானிகள் எக்ஸ் கதிர்கள் - புற்றுநோய்க்கிருமிகளை அழிக்கக்கூடியது எனக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ரேடியோக் கதிர்கள் ஓரளவுக்கு இந்த வேலையைச் செய்யக்கூடியன என, ஆய்வுகளின் முடிவுகள் காட்டுகின்றன. சில ரேடியோக் கதிர்கள் உடலைப் பாதிக்கும் எனப் பயப்படலாம். ஆனால், இது உடலுக்கு எந்தத் தீங்கும் செய்யாது. ஜீன் த்ரபி மூலம் நைத்திரிக் ஒட்சைட்டினது செயற்பாடு அதிகரிக்கப்படுகின்றது. நைத்திரிக் ஒட்சைட் எமது உடலின் எல்லாவகையான செயற்பாடுகளுக்கும் முக்கியமானது. ஆனால், ஓரிரு தடவைகளில் இது குணமாக்கக்கூடியதல்ல. தொடர்ச்சியாக, ஒழுங்கான முறையில் இந்தவகைச் சிகிச்சையைப் பெறுதல் வேண்டும். அப்போது தான் இதனுடைய பலன்தரும் விளைவு கிடைக்கும். இப்போது உலகளாவிய ரீதியில் பெரும்பாலான புற்றுநோயாளர்கள் கதிர்த்தொழிற்பாட்டுச் சிகிச்சை முறையையே விரும்புகிறார்கள்.



## கவர்ச்சியான ரோபோக்கள்

இயந்திர மனிதர்களை உற்பத்தி செய்கின்ற வரலாற்றில், தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற 'C3 PO' என்ற இயந்திர மனிதனும் மற்றும் ஹொண்டாக் கம்பனியின் தயாரிப்பான அசிமோபொட் சாகி அஸ்ரோபோய் ஆகியனவும் மைல் கற்களாக விளங்குகின்றன. இவையாவும் இயந்திர மனிதர்களை விரும்பும் மக்களைக் மகிழ்ச்சிப்படுத்தியிருக்கின்றன. இந்தவகை இயந்திர மனிதர்கள் - அண்மையில் நடந்த ஒரு நிகழ்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. அப்போது அவை செய்துகாட்டிய சாகசங்கள் மிகவும் பயனுள்ளதாயிருந்தன. அவற்றுள் சில ஏற்கனவே உருவாக்கப்பட்டன என்றாலும், தற்போது சிறு மாறுதல்களுடன் வந்திருக்கின்றன. அசிமோ என்ற இயந்திர மனிதன் 1969 ஆம் ஆண்டு உருவாகியது. ஆனால், புதிய தொழில் நுட்பங்களுடன் தற்போது காணப்படுகின்றது. றொபி என்ற இயந்திர மனிதன் தான் 2003 ஆம் ஆண்டின் அதிசிறந்த றொபோட் ஆகக் கருதப்படுகிறது. தற்போது காணப்படுகின்ற இயந்திர மனிதர்களின் உலோக உடல் எல்லோரையும் பளபளப்பாகக் கவருகிறது.





வரலாறு பகுதி - I மறவன்புலவு - க.சச்சிதானந்தன்

## ஈழத்தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசங்களை சிங்களவர் அபகரித்த வரலாறு

# தமிழர் பிரதேசங்கள் மேலாட்சி பெற்ற காலம்

**கொழும்பு கடற்தொழில் திணைக்கள ஆய்வு அலுவ லராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரா கவும், 23 நாடுகளில் ஐ.நா உணவு, வேளாண்மை நிறுவன ஆலோசகராகவும் பணிபுரிந்த மறவன்புலவு க.சச்சிதானந்த னின் ஈழத்தமிழர் வரலாறு தொடர்பான கட்டுரை பிரசுரமாகிறது.**



இலங்கை ஓர் அழகானதீவு. இந் தயத்துணைக் கண்டத்தின் தெற்கே மாம்பழ வடிவத்தில் இத்தீவு உள் ளது. இந்தியாவையும் இலங் கைத் தீவையும் பிரிக்கும் கடல்கள், வடக்கே பாக்கு நீரிணை, தெற்கே மன்னார்க் குடா.

இராமேஸ்வரம் தீவு, இராமர் அணை, மன்னார்த்தீவு ஆகியன பாக்குநீரிணையையும், மன்னார்க் குடாவையும் பிரிக்கின்றன. இந்தத் தீவின் தெற்கே இந்துப் பெருங்கடல் தென் துருவ நிலப்பகுதி வரை கடல் தவிர வேறில்லை.

கிழக்கே வங்காள வரிகுடா, சுமாத்ரா வரை அகன்று பரந்துள்ளது.

தீவின் வடக்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் தமிழகம் உள் ளது.

தீவின் நடுப்பகுதி மலைப்பாங் கான, மழை வீழ்ச்சியுடைய , வளப்பமான நிலங்கள், தீவின் கிழக்கும், வடக் கும, வடமேற்கும் ஆங்காங்கே குன்று கள சிதறிக் கிடக்கும் சம வெளிகள்.

வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொடக்கம் மனிதர் அந்தத்தீவில் வாழ ந்து வருகின்றனர். வேடர்களாய், மந்தை மேய்ப்பவர்களாய், வாழ்ந்த கற்கால, உலோககால மக்களைப் பற்றிய தொல்லியல் தடயங்கள் தீவெங்கி லும் உள்ளன.

இந்தத் தொல்லியல் தடயங் களும், இதே காலங்களில் தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்களின் தொல்லியல் தடய ங்களும ஒத்தவை எனத் தொலலியலாளர் தெரிவித்துள்ளனர்.

பின்பு வந்த எழுத்துப் படிமங்களும், கல்வெட்டுச் சான்றுகளும் இலங கைத் தீவிலும், தென் இந்தியாவிலும் ஒத்தவையாக இருந்ததை தொல் லியலளாகள் உறுதிப்படுத்தினர்.

இலங்கைத் தீவிலும், தமிழகத் திலும் தமிழரே தொல்குடி மக்கள் என்பதை இந்தத் தொல்லியல் சான் றுகள் நிறுவும்.

சிவன், மூத்தசிவன் ஆகிய தமி ழர்கள் அரசர்களாக இருந்த செய்தி கள் தீவின் வரலாற்றில் உள்ளன.

வங்கம்/கலிங்கம் சார்ந்த இள வரசனும் அவனது குடிமக்களும் இந்தத்தீவிற்கு வந்தமையும், பாண் டியப் பெண்களை மணந்தமையும் இந்தத்தீவின் வரலாற்று நிகழ்வுகள்.

தமிழகத்திலும், இலங்கைத்தீவி லும் தமிழர்களே பரந்து வாழ்ந்ததும், இந்த இளவரசன் விஜயனின் வருகை யால் தீவில் புது மொழியாளர் பெரு மளவில் குடியமர்ந்ததும் வரலாற் றுத் திருப்புமுனை (கி.மு.550 அளவில்)

அசோகப் பேரரசு காலத்தில் , கிமு 269 - 227 அளவில், தமிழக மும் இலங்கையும் புத்தமத மாற் றத்தின் நிலைகளம் ஆயின.

அசோகப் பேரரசனின் மகன் மகி ந்தன் இலங்கைக்கு வந்து தீவின் மன்னனைப் புத்தனாக்கிய வரலாற் றுச் செய்தி உண்டு. பின்னர் அசோக னின் மகள் சங்கமித்திரை, கயா விலிருந்து வெள்ளரசுக் கிளையுடன் இலங்கைக்கு வந்ததும், அதனை அனுராதபுரத்தில் நட்டதும், வரலாறு நிகழ்வுகள். அந்த அரசமரம் இன் றும் அனுராதபுரத்தில் உள்ளது.

அசோகப் பேரரசு காலத்தை யொட்டி இலங்கையிலே வடமொழி, பாளிமொழி, கலிங்கமொழி, தமிழ் மொழி, அனைத்தையும் இணைத்த ஒரு புதிய மொழி உருவாகி வளர் ச்சி பெற்றுவந்தது.

அந்த மொழியை இளவரசன் விஜயனோடு இணைத்துப் பிற்காலத் தில் சிங்கள மொழி என அழைத் தனர்.

கரிகாற் சோழன் காலத்தில், கி.மு 200 அளவில், இலங்கை மீது சோழப் படையெடுப்பு நிகழ்ந்ததும், ஆற்றை மறித்து அணை கட்டத் தொழில் நுட்பத்தையும், அதற்குரிய ஆள அணியையும் கரிகாலன் இலங் கையிலிருந்து தமிழகம் கொண்டு சென்றதும். காவிரிக்குக் குறுக்கே கல்லணையைக் கட்டியதும் வரலாறு, கரகாலன் படையெடுப்பதைத் தொட ர்ந்து இலங்கையில் நிலை கொண்ட சோழசசிற்றரசர் வழிவந்து, தன்னாட்சி யுடைய தமிழ்மன்னனாக நிமிர்ந் தவன் எல்லாளன். தீவு முழுவதை யும் கி.மு 161 -117 காலப்பகுதியில், எல்லாளன் ஆட்சி செய்தவன்.

"தெற்கே கடல், வடக்கே தமிழர் நான் எப்படி நீட்டி நிமிர்ந்து படுக்க முடியும் என்று கேட்ட சிங்கள இளவ ரசன் துட்டகாமினி பெயரிலேயே துட டன் என்ற அடைமொழி கொண்ட வன்"

எல்லாளனுடன் போரில் மோதி, தோல்வியடைந்த நிலையில் வயது முதர்ந்த அந்தத்தமிழ் மன்னனை இளைஞனான சிங்கள இளவரசன் தனிசசமருக்கு அழைத்து, வெட்டி வீழ்த்தித் தமிழ் அரசைக் கைப்பற்றி னான்.

சிங்கள - தமிழ் எதிர்ப்பு உணர் வின் தொடக்க நிகழ்வு அதுதான். தமிழரின் தலைநகரான அனுராத புரத்தைச் சிங்களவர் கைப்பற்றித் தமது தலை நகராக்கினர்.

இலங்கைத் தீவில் தமிழரின் நிலத்தைப் போரில் கைப்பற்றிச் சிங் கள நிலமாக்கிய முதல் நிகழ்ச்சி அதுதான்.இதைத் தொடர்ந்து சிங்கள வரும தமிழரும் அந்தத் தீவில் தமக்குரிய நிலப்பகுதிகளை தனித்த னியே வைத்திருக்கத் தொடங்கினர்.

தமிழகத்துக்கு அண்மித்தவை யாகவும், கரையோரங்களாகவும், சமவெளிகளாகவும் உள்ள பகுதிகள் தமிழர் நிலப்பகுதிகள்.

மலைப்பாங்கான நடுப்பகுதியும், தமிழகத்திற்கு எட்டாத தெற்குப் பகு தியும் சிங்கள நிலப்பகுதிகள்.

தமிழகத்தில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் வைணவ சைவ மதங்களை மீளவும் தமிழ் மக்களின் சமயங்களாக மாற்றிய காலப்பகுதி யில் கி.பி 550 -800 இலங்கைத் தீவிலும் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது.

சைவ சமய மறுமலர்ச்சியால் இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழர் பலர மீளவும் சைவ சமயிகளாயினர.

புத்தர்களாய் இருந்தவர்களோ, தமிழை விட்டு, சிங்களமொழியை மட்டும் புத்தத்துக்குரிய மொழியாக் கிக் கொண்டனர். இராஜ இராஜ சோழன் காலத்திலும், இராஜேந்திர சோழன் காலத்திலும் கி.பி. 993 - 1070 அளவில் நடந்த படையெடுப் புக்கள் தீவு முழுவதையும் தமிழர் ஆட்சிக்குள் கொண்டு வந்தன.

பொலநறுவையில் சோழர் தலை நகரம் அமைந்தது. சிங்களவர் தெற்கு நோக்கிச் சென்றனர்.

தீவின் மலைப்பகுதியும், தென் பகுதியும் சிங்களவரின் வாழ்வு நிலங் கள் ஆயின. கிழக்கேயும், வடக்கே யும், வடமேற்கேயுமுள்ள சமவெளி நிலங்கள் தமிழர் நிலங்களாயின.

சிங்கள - புத்தர் தென் பகுதியை யும், மலைப்பகுதியையும் கொண்டி ருக்க சைவர்களாகிய தமிழர்கள் கிழக்கு, வடக்கு, வடமேற்கு, சமவெளி களைத் தமதாக்கினர்.

மீண்டும் சிங்கள அரசுகள் வலிமை பெற்றிருந்தும் கூட தமிழர் நிலங்களில் மேலாட்சி செலுத்த முடியவில்லை.

பின்பு பாண்டியர், கி.பி 1215 இல இலங்கைத்தீவு மீது படையெடுத்தனர். பாண்டியர் படையுடன் சென்ற பொழுது சிங்களஅரசு மேலும் தெற்கு நோக் கிப் பின்வாங்கியது. கண்டியிலும், கோடடையிலும் சிங்களத் தலைநக ரங்கள் அமைந்தன. தமிழர் தலைநகர் சோழர் காலத்தில் பொலன நறுவை யில் இருந்தது. பாண்டிய படையெடுப் போடு வடக்கே யாழ்ப்பாணத்திற்கு மாறியது. *(தொடரும்.)*

---

நேர்காணல் விஜேந்திரன்

# சிற்பத் தொழிலில் தனி இடமொன்றை இளைஞர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்



ஆடம்பரமற்ற அமைதியான வாழ்க கையை நடத்தி வரும் மூத்த சிற் பக் கலைஞர் பெனடிற் சைமன் கிளைவ்- யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவச் சிற்பங்கள், அவை மேற்கொள்ளும் முறை, கிறிஸ்தவ சிற்பங்களுக்கான முகக்கியத்துவம் தொடர்பாக பல கருத் துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

நான் சிறுவயது முதலே சிற்பத் துறையில் செயற்படத் தொடங்கினா லும, இந்தத் துறையில் பகுதிநேர மாகவே செயற்பட்டு வருகின்றேன். எனது சிறிய தந்தையும் இலங்கை யின் பல பாகங்களிலும் கிறிஸ்தவ சிற்பங்களில் தனக்கென தனியான



**பெனடிற் சைமன் கிளைவ் இனால் செதுக் கப்பட்ட யாழ். மரியன்னை சேமக்காலையிலுள்ள சிலுவையில் அறையுண்ட இயேசுநாதரின் சிற் பத்தை காணலாம்.**

பாணியை வகுத்துக் கொண்டவரு மான மறைந்த மேஸ்திரி லியோவே நான் இந்தத்துறையில் பிரவேசிக்கக் காரணமாவார். இவரையே எனது குருவாகவும் ஏற்றுக் கொண்டேன்.

கடந்த 50 வருடங்களாக இந்தத் துறையில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றேன். இதில்பல மேடுபள் ளங்களைச் சந்தித்தவன் என்ற வகை யில், சிற்பக்கலைஞர்கள் எதிர்நோக் கும் பிரச்சினைகள், எமக்கான அடிப் படை உதவிகளோ, ஆதரவுகளோ கிடைப்பதில்லை. அண்மைக்கால மாக இந்தத்துறை தனது தனித் துவத்தை இழந்து வருகின்றது.

குருநகர் சென்ேஜம்ஸ் மகா வித்தியால யத்தில் சாதரணதரம் வரை கற்ற நான், சித்தி ரப் பாடத்தில் விசேடசித்தி பெற்றேன். தொடர்ந்து சிறியதந்தையுடன் சிற்ப வேலைகளில் ஈடுபட்டு வந்தேன். தனியே சிற் பத்தை வடிவமைப்ப தற்கு முன்னர் எனது குரு வினால் வடிவ மைக்கப் படும் சிற்பங்களுக்கு வர்ணம் தீட்டுவதில் ஈடு பட்டு வந்தேன். இந்தத துறையில் முழு நேர மாக நான் ஈடுபட எனது குடும்பநிலை இடம் கொடுக்காமையால் கட் டட வேலைகளில் என்னை இணைத்துக் கொண டேன். இதன்பயனாக யாழ்ப்பாணத்தில் முக்கிய தேவா லயங்களிற்கு மிக நேர்த்தியாக கலை நயத்துடன் தேவாலய முகப்புக்களை அமைத் தேன். இதன் மூலம் மண்டும் நான் சிற்பத் துறையில் பிரகாசிகக வழி ஏற்பட்டது.

பொதுவாக கலைப்படைப்புக் களை மேற்கொள்ளும் போது, குருபக் தியும், இறைபக்தியும் மிகமுக்கிய மானது. அதிலும் சமய புராணங் கள் வேதாகம நிகழ்வுகளை சித்தரிக் கும் போது நாம் இறைவனுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தி, இறைவனிற் கும இறைமக்களிற்கும் இடையே இடைத் தொடர்பாளனாகவே செயற்படுகின் றோம். இதற்கு இறைபக்தியும் தூய் மையான மனநிலையும், ஒரு நிலைப் படுத்திய மனநிலையும் அவசியம். கிறிஸ்தவ சிற்பங்களை வடிவமைப் பதினால் நாம் விரும்பியோ, விரும் பாமலோ இறைபணியை ஏற்றுக் கொண்டு செயற்படுவதாகவே அமை கிறது.

மரம், பிளாஸ்ரபரீஸ், சீமேந்து ஆகியவற்றை உள்ளீடாகக் கொண்டே சிற்பங்களை வடிவமைத்து வருகி றேன். அதிலும் எனது அதிகளவான படைப்புக்கள் சீமேந்தினால் மேற் கொள்ளப்பட்டவை. நான் வடிவமைக கும சிற்பங்களில் பெரும்பாலானவை வேதாகம நெறிமுறைகள. கு அமை வான - அதிலும் இறை மகன் இயேசு கிறிஸ்துவைச் சித்தரிக்கும் சிற்பங் களே அதிகம். இவற்றில் எனது குருவின் பாணியைப் பின்பற்றினா லும், ஐரோப்பிய சிற்பியும் கிறிஸதவ ஓவியருமான மைக்கல் அஞ்சலோ வின் பாதிப்புக்கள் எனது படைப்புக் களில் நிறையவே இடம்பெற்றுள் ளது. இதற்கு மைக்கல் அஞ்சலோ வின் நூல்களை நான் பயின்றமையே காரணமாகும்.

சிற்பங்களை வைக்கும் இடங் களைப் பொறுத்தே நான் உள்ளீடு களைத் தெரிவு செய்கின்றேன். கோயிலுக்கு உள்ளேவைக்கும் சிற் பங்கள் அதிலும் சிறியவை என்றால் அவற்றை பிளாஸ்ரபரிஸ் கொண்டே வடிவமைப்பேன். மாறாக வெளியே வைப்பதும், பெரிய சிற்பங்களாயின் அவறறை சீமேந்தினாலேயே வடிவ மைப்பேன். சிற்பங்களிற்கு அளவுகள் மிக முக்கியமானது. அளவுப் பிரமானங் களுககு அமைவாகவே சிற்பங்களை அமைத்து வருகின்றேன். பொது இடங்களில்வைக்கும் சிற்பங்கள் உயரத்தில் வைப்பதாயின் ஒரு அடி அல்லது இரண்டடி உரிய அளவில் இருந்து அதிகரிக்க வேண்டும். சிற் பங்களிற்கு மெருகூட்டும் அம்சங்க ளில், சிற்பம் வைக்கும்இடம் முக்கி யம் பெறுகின்றது என இங்கு நினைவு கூருவது பொருத்தமாக அமையும்.

எனது படைப்புக்கள் என்னும் போது யாழ்நகரிலுள்ள புனித மரியாள் ஆலயத்தில் (O.L.R) இறைமகன் இயேசு அநுபவித்த பாடுகள், மரணம் என இவற்றைச் சித்தரிக்கும் ( 14 ஸ்த லங்கள்) காட்சி ஆலயத்தின் வெளிப் புறச்சுவரிலே வடிவமைக்கப்பட்டுள் ளது. மிகவும் தத்ரூபமாக வடிவமைக கப்பட்ட இந்தச் சிற்பங்கள் சீமேந்தி னாலானவை 50 இற்கும் மேற்பட்ட உருவங்களை கொண்டதான இந்தச் சிற்பங்களினால் வடக்கின் கல்வாரி என்ற கௌரவப் பெயர் கூட இந்த ஆலயத்திற்கு உண்டு.

இதனுடன் என்னை வெளி உல கிற்கு இனம் காட்டிய படைப்புக்க ளாக - புங்குடுதீவு சவேரியார் ஆல யத்தில் சிலுவையில் அறையுண்ட ஆண்டவர், யாழ்.நகர் அருள் மாதா கோவிலிலுள்ள சிலுவையில் அறை யுணட ஆண்டவர், யாழ்.மரியன்னை சேமக்காலையிலுள்ள சிலுவையில் அறையுண்ட ஆண்டவர், மன்னார் உயிலங்குளம் லூர்துகெவி வடிவ மைப்பு, யாழ்.நகர் யாகப்பர் ஆலயத் தின் முகப்பு வடிவமைப்பு ஆகியவற்றை முக்கியமாக் கூறமுடியும். நான் கிறிஸ தவ சிற்பக் கலைஞர் என்ற பெயரில் செயற்பட்ட போதிலும் எனது முதல் சிற்பம் மறைந்த முன்னாள் இந்திய முதலமைச்சர் M.G.இராமச்சந்தி ரனின் மனித அளவுடைய சிற்பமா கும். இச்சிற்பம் குருநகர் பகுதியி லேயே நிறுவப்பட்டது. இதனை குருநகர் **M.G.R** மன்றத்தினரே ஏற்பாடு செய்தனர். மறைந்த அரசி யல்வாதியும், கல்விமானுமாகிய **G.G.**பொன்னம்பலத்தின் முழு அளவு டைய சிற்பத்தையும் வடிவமைத் தேன்.

சிற்பத்தை வடிவமைக்கும் போது, முதலில் களிமண்ணினால் உரு வத்தை உருவாக்கி, அதற்கு மேல் சீமேந்தினால் மேற்பூச்சு பூசியும் வடி வமைக்கலாம் அல்லது வலைக் கம் பிகள், கம்பிகளை கொண்டும் உரு வத்தை வடிவமைத்து சிற்பத்தை மேற்கொள்ளலாம். சீமேந்தினால் மேற்கொள்ளப்படும் சிற்பங்களுக்கு தனிச் சீமேந்தினைக் கரைத்து இறு திவடிவம் கொடுத்த பின்னரே வர்ணப் பூச்சுக்கள் இடம்பெறுகின்றன. சிற் பத்தை வடிவமைக்கும் போது, உரு வத்தின் தன்மையப் பொறுத்தே சீமேந்து, மணல் கலப்பதில் மாற்றங் கள் இடம்பெறும். இவை உருவ அமைப்புக்களிற்கு பெரும்பங்காற்றி வருகின்றது.

சிற்பங்களின் முகபாவங்களை வெளிப்படுத்துவதற்கு நவரசங்க ளின் தன்மையும், அவற்றின் வெளிப் பாடுகளுமே காரணமாகிறது. கிறிஸ் தவ சிற்பங்களில் பாவம், சாந்தம், கருணை, பயம் என இவற்றின் தன்மைகள் அதிகமாக வெளிப்படும். ஒரு சில சிற்பங்களில் வீரத் தன்மைக ளையும் காணமுடியும்.

ஒரு குடும்ப அங்கத்தவர் மிகவும் நெருக்கமாகத் தனது குடும்ப அங்கத் தவர்களுடன் ஒன்றித்துச் செயற் பட்டு, அவர்களது காலம் முடிந்த பின்னர் அவர்களது படங்களை வைதது நினைவு கூருகின்றோம் வழிபடுகின்றோம். இவை வெறும் சம்பிரதாய நிகழ்வாக அமையாது பக்தி பூர்வமாகவே அமையும். அதே போலவே சீமேந்தினால் வடிவமைக் கப்படும் சிற்பங்கள் உரிய இடங்க ளுக்குப் போகும் போது அதற்கான இடம் (நிலை) கிடைப்பதுடன், பக் தியும், மரியாதையும் கிடைக்கின் றன. இவை தெய்வச் சிற்பங்களிற்கு வகுக்கப்பட்ட ஒரு நெறிமுறையா கவும் உள்ளது.

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ சிற்பக்கலைஞர்களில் ஒரு சிலரே இன்றுள்ளனர். அதிலும் மதிநுட்ப மாக, அதே நேரம் முழு நேரத் தொழி லாக மேற்கொள்பவர்கள் இன்று இல்லை. முன்பு தேவாலயங்களிற் கான சிற்பங்கள் இங்கேயே வடிவ மைக்கப்பட்டன. இன்றைய காலப் பகுதியில் சிற்பங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு சிலர் இயந்திரங்களின் உதவியுடன் சிற்ப வேலைகளைச் செய்து வருகின் றனர். இந்தநிலை மாறவேண்டும். ◆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்*
*தீவினை செய்யான் எனின்*

திருக்குறள்

# நமது நோக்கு

## கிழக்கின் அமைதியின்மையும், அதற்கு காரணமானவர்களும்.

கிழக்கின் அமைதியின்மை என்பது தொடர்ந்தும் மக்களிடையே அவர்களின் இருப்புக்கும், இயல்பு வாழ்வுக்கும் அச்சுறுத்தல்விடுக்கும் ஒன்றாக இருப்பதாகவே அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அமைதியின்மையைத் தொடர்ந்தும் தக்க வைத்திருப்பதன்மூலம் தங்களது சுயநல அபிலாஷைகளை எட்டத் திட்டமிடும் நாசகார - சமூக மற்றும் தேசவிரோத சக்திகளின் செயற்பாடுகள் யாவும்கிழக்கு மக்களின் - குறிப்பாக தமிழ் மக்களின் - வாழ்வை மட்டுமல்ல, கிழக்கு மண்ணின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கும் முனைப்பினைக் கொண்டதாகவே உள்ளது.

கிழக்கில் கருணா ஏற்படுத்திய பிரதேசவாதச் சலசலப்பினை பேரினவாத சக்திகள் ஒரு பாரிய விவகாரமாக்கி அதன்மூலம் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை சிதைக்கவும் வடக்கு- கிழக்கு தமிழர் பாரம்பரிய தாயக பூமியில் பிளவை ஏற்படுத்தி அதனை இரண்டாகப் பிரித்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தவும் மேற்கொண்ட மூலோபாயத்திட்டங்கள் யாவும் கருணா கிழக்கை விட்டு துரத்தப்பட்டமையைத் தொடர்ந்து சாத்தியமற்றவையாக்கிவிட - அதனை முற்றிலும் எதிர்பார்த்தேயிராத அந்த சக்திகள் கிழக்கில் ஒரு நிரந்தர குழப்பநிலையை, பீதியூட்டும் அமைதியின்மையை, தன்னாளுமையை இழந்து தம்மைச் சரணடைந்த கருணாவையும், அவரது பெயரையும் பயன்படுத்தி, தொடர்ந்தும் நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்ள மேற்கொண்டுவரும் முயற்சியின் எதிரொலியாக அந்தப் பிரதேசத்தின் இன்றைய பதற்றநிலைக்கு மூலகாரணமாகும்.

தன்னையும், தன்பின்னால் நின்ற நான்கைந்து பேர்களையும்கூட பாதுகாத்துக்கொள்ளும் திராணியற்றுத் தனது ஒரு காலத்திய எதிரிகாலில் சரணடையும் மன நிலைக்கு இறங்கிவிட்ட கருணாவினால் தனியாகத் தன்னுடைய சொற்ப தொகையிலான கூட்டாளிகளை வைத்துக்கொண்டு, கிழக்கில் சுயாதீனமாகச் செயற்பட்டு இத்தகைய அமைதியற்ற சூழலை பீதியூட்டும் வகையில் மேற்கொள்ளுதல் என்பது எந்த வகையிலும் முடியாத காரியமாகும்.

அதேபோல் தப்பியோடி இராணுவப்பாதுகாப்பைத் தேடி தலைமறைவாக இருந்து கொண்டு - தனது எதிர்காலமே கேள்விக்குறியான நிலையில் தனது ஆதரவுச் சகாக்கள் மூலமாக இத்தகையதோர் நெருக்கடி நிலையைக் கிழக்கில் ஏற்படுத்த முடியும் என எவரும் நம்பினால் அது பைத்தியக்காரத்தனமாகவே இருக்கும்.

எனவே கிழக்கின் இன்றைய அமைதியின்மைக்கு கருணா என்னும் வெறும் மனிதன் மட்டும் காரணம் என்று கூறமுடியாது. அவருடன் இணைந்து, அவரது காட்டிக் கொடுத்தல் வழிகாட்டலில், கிழக்கில் பதற்ற நிலையை ஏற்படுத்தி, மக்களிடையே அச்சத்தை உண்டுபண்ணுவதன் மூலம் தமது அரசியல் மற்றும் வேறுவகையிலான உள்நோக்கு இலக்குகளை எட்ட நினைக்கும் தமிழின-தமிழ்த் தேசவிரோத சக்திகளும், அவர்களுக்கு அனுசரணையாக இயங்கும் வேறு வலுவான புறச்சக்திகளும், ஏன் ஒருசில வெளிச் சக்திகளும்கூட, இதற்குக் காரணமாக இருக்கலாம்.

பெரும்பாலும் கிழக்கில் பதற்றநிலை உண்டுபண்ணும் கொலைத் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வோர் அரச அல்லது படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் இருந்து இராணுவச் சோதனைச் சாவடிகள், முகாம்கள் ஆகியவற்றைச் சர்வசாதாரணமாத் தாண்டி ஆயுதங்களுடன் வந்து அவற்றைச் செய்துவிட்டு மிகவும் இயல்பாக வந்தவழியே திரும்பிச் சென்றுவிடுகிறார்கள். என்பதை கவனத்திற்கொண்டு பார்த்தால் பல்வேறு சந்தேகங்களுக்கான தெளிவான பதில்கள் சிரமமின்றிக் கிடைத்துவிடும்.

இந்த கொலை வெறி கொண்ட குழப்பவாதிகளுக்கு பாதுகாப்பு அநுசரணை வழங்குவோர் நிச்சயமாக அவர்களின் மூலமாக ஏதோ ஒரு வகையிலான இலாபங்களைப் பெற்றுக் கொள்பவர்களாகவே இருப்பர் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை.

தொடரும், இத்தகைய அமைதியின்மைக்கான சம்பவங்களின் பின்னணியில், சமாதானவிரோத, போர்வெறி கொண்ட சக்திகள் நிச்சயமாக இயங்கவே செய்கின்றன.

நெடுங்காலம் இதனை இப்படியே தொடர விடுவது கிழக்கை முற்றிலும் ரணகளமாக்கும் நிகழ்வுகளின் தளமாக மாற்றி விடும் அபாய நிலைக்கே இட்டுச் செல்லும் என்பது உறுதி. இதறகு ஒரு முற்றுப்புள்ளி வைக்காது சமாதான முயற்சிகளைத் தொடர்வதில் அர்த்தமேதும் இருக்கப்போவதில்லை.

இந்தப் பதற்ற நிலைக்கு கருணா விவகாரமும் அவருக்குப் பாதுகாப்பு வழங்கி பராமரிக்கும் படை மற்றும் அரசதரப்பும் தான் காரணம் என்பது வெளிப்படையான உண்மையாகிவிட்ட நிலையில், படைத்தரப்புடன் மாதாந்த சந்திப்புக்களை மேற்கொள்வதிலோ, சமாதானப் பேச்சுக்களை அரசுடன் தொடர்வதிலோ அர்த்தமேதுமில்லையென புலிகள் தீர்மானித்திருப்பது நியாயமேயாகும்.

## நாடும் நடப்பும்



செய்தி:
கருணாவுக்கு அரசு பாதுகாப்பு வழங்கவேண்டும் என ஹெல உறுமய கோரிக்கை.

## மோட்டார் சைக்கிள் வைத்திருப்போரின் விபரங்கள் படையினரால் சேகரிப்பு

பருத்தித்துறைப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில், மோட்டார் சைக்கிள் வைத்திருப்போரின் விபரங்கள் படையினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை முனைப்பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி - பருத்தித்துறை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு, விபரங்களைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் ஜே/401, ஜே/403 ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளிலும், கிராம அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று மோட்டார் சைக்கிளின் இலக்கம், இனம், நிறம் மற்றும் உரிமையாளரின் பெயர் ஆகியவற்றைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(122)

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன

(சாவகச்சேரி)

பளைப் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 25 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புலோப்பளை மேற்கு கிராமத்தில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் கிராம அலுவலர்கள் மூலமாக தெரிவு செய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும், பூநகரிப் பிரதேசசெயலர் பிரிவில் 25 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

(122)

## பொலிஸ்படைக்கு மீண்டும் ஆட்சேர்ப்பு

இலங்கைப் பொலிஸ் படைக்கு மீண்டும் ஒருமுறை ஆட்சேர்ப்பு நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவித்தலை மக்கள் பாதுகாப்பு நல்லிணக்க அமைச்சு அறிவித்துள்ளது.

இனவிகிதாசார அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்பு நடைபெறுமா என்பது குறித்து, ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு முடிவெடுக்கப்படவுள்ளது.

இதன்படி பொலிஸ் படைக்கு 12 ஆயிரம் பேர் சேர்க்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பும் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இது 10 ஆயிரம் என்ற இலக்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நெடுந்தீவில் மணல் ஏற்ற பொலிஸார் தடை விதிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் மக்களின் சொந்தத் தேவைகளுக்கு மணல் ஏற்றுவதற்கு, நெடுந்தீவுப் பிரதேச பொலிஸார் தடைவிதித்து வருவதனால், பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதிக்கு சுற்றுலா நோக்கமாக வந்திருந்த ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் நெடுந்தீவின் கரையோரங்களில், சில இடங்களில் மணல் ஏற்றப்பட்டிருப்பதைக் கண்டு - மணல் ஏற்றுவதைத் தடைசெய்யும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுச் சென்றதாகத் தெரியவருகிறது.

ஆனால், பலவருடங்களுக்கு முன்னர் அவ்வாறு ஏற்றப்பட்டாலும், தற்போது பிரதேச மட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் சிபார்சுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மட்டுமே மணல் ஏற்ற அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு நடைமுறைகளுக்கமைய பிரதேச செயலகம் ஊடாக அனுமதி பெறப்பட்டபோதும், பொலிஸார் தங்களது அனுமதியை வழங்க பின்னடிப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வியாபார நோக்கில், சட்டவிரோதமாக மணல் ஏற்றி விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு இங்கு மணல் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. அத்துடன், மக்கள் தங்கள் தேவைகளுக்கு மட்டுமே இதனைப் பெறுவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொலிஸாரின் இந்த நடைமுறையினால் தற்போது நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் வெட்டுக்களிக்குளம் வேலைக்கும், மணல் ஏற்றுவதற்குரிய அனுமதியை பொலிஸார் வழங்கமறுத்து வருவதனால், குறித்த காலப்பகுதியினுள் செய்து முடிக்கவேண்டிய வேலை இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

(113)

## மாகாணசபைத் தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பாக நேற்றுடன் 142 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் 118 சம்பவங்கள், தேர்தல் அத்துமீறல் சம்பவங்கள் எனத் தெரவிக்கப்படுகிறது. மேல்மாகாணம் மற்றும் தென்மாகாணம் போன்றவற்றிலேயே இந்தத் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, 6 மாகாணங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பிக்குகள் மீதான தாக்குதலை கண்டித்து கொழும்புக்கு பாதயாத்திரை

(கொழும்பு)

தமது கட்சியின் உறுப்பினர்கள் கடந்த எட்டாம் திகதி தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஹெல உறுமயவினர் நாளை பாதயாத்திரை ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாளை காலை களுத்துறையிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை கொழும்பைச் சென்றடையவுள்ளது.

இதில் தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு நடந்துகொண்டது முறையற்றசெயல் என்பதனை வலியுறுத்தியுமே இந்தப் பாதயாத்திரை நடத்தப்படவுள்ளதாக ஹெல உறுமயவினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்



## வேம்பின் மருத்துவ பயன்

- வரணியூர் எஸ். ஜெயா

# பயன்பாடு நிறைந்த வேம்புக்கு பொருளாதார முக்கியத்துவம் ஏன் குறைவு?

### அறிமுகம்

'வேம்பில் ஆயிரம் மருந்து' என்பது தமிழர் கிழமொழியாகும். வேம்பு மருந்துத் தேவைக்கு மட்டுமன்றி பல்வேறு கைத்தொழிலுக்கும் பயன்படுததப்படுகின்றது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வேம்பைப் பல்வேறு உலக நாடுகள் பூச்சிநாசினிகளின் தீமைகளை உணர்ந்து அவற்றிற்குப் பதிலாக பயிர் பாதுகாப்பில் பயன்படுத்துகின்றார்கள்.

பழம் பெருமை பேசிக் காலம் களிக்கும் நாம் இன்னமும் இதில் அக்கறை கொள்ளவில்லை. இவ்வாறு அக்கறை கொள்ளாது இருப்பது வருந்தத்தக்கது. நாம் ஓரளவிற் கேனும் வேம்பைப்பயன்படுத்த முன்வருவோமாயின் எதிர்காலத்தில் பயிர் பாதுகாப்பில் வேம்பின் பயன்களைப் பெற முடியும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

வேம்பு "அசடிற்றா இன்டிக்கா" என்ற தாவரவியற் பெயரையுடையது. ஆங்கிலத்தில் மார்க்கோசா அல்லது நீம் என்று அழைக்கப்படுகின்றது.

சர்வதேச வேம்பு பற்றிய முதலாவது கருத்தரங்கு 1980 இல் ஜேர்மனியில் நடைபெற்றது. இதன்போது 20 வகையான வண்டுகள், 5 வகையான ஈக்கள், 14 வகையான மூட்டுப் பூச்சிகள், அந்துக்கள், 5 வகையான தத்திகள் போன்றவற்றை வேம்பின் பொருட்களால் கட்டுப்படுத்த முடியுமெனக் கூறப்பட்டுள்ளது.

### வேப்பிலை

வேப்பிலையானது. புகையிலை தவிர்ந்த மற்றைய பயிர்களுக்குப் பசுந்தாட் பசளையாகப் பாவிக்கப் படுகின்றது. புகையிலையில் கசப்புத் தன்மை அதிகரிக்கும் என்ற காரணத்தினால் வேப்பிலை அதிகளவு பசளையாகப் பாவிப்பதில்லை.

வேப்பம் குழையைப் பசுந்தாட் பசளையாகப் பாவிக்கும் போது மணிவேர் நோயைத் தடுப்பதாகக் கண்டறிந்துள்ளனர். வேப்பமிலை அதிக புரதச் சத்துள்ள இலையாகும். வேப்பம் விதையால் கட்டுப்படுத்தக்கூடிய பூச்சிகளை வேப்பிலையைக் கொண்டும் ஓரளவிற்கு கட்டுப்படுத்தலாம்.

### வேப்பம் விதை

ஒரு மரத்திலிருந்து ஏறக்குறைய 20 தொடக்கம் 25 கிலோ விதைகளைப் பெறமுடியும். இது ஒரு வருடத்தில் பெறக்கூடிய மகசூல் ஆகும. வேப்பம் விதையை மாவாக்கி விதைகளுடன் கலந்து வைத்தால் களஞ்சியப் பீடைகளைக் கட்டுப்படுத்துகின்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் நாற்றுமேடைப் பகுதியில் குறவணவன் தாக்கம் அதிகமாக இருந்து வந்த பகுதிகளுக்கு கூட்டெரு தயாரிக்கும் போது வேப்பம் விதைகளையும், சருகுகளையும் சேர்த்து வந்த பசளையை நிலத்துக்கு இட்டபோது தாக்கம் முற்றாக அற்றுக்காணப்பட்டது.

"மண்டரின்" இனத் தோடையைத் தாக்கும் பழஈயைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கு ஜேர்மனியில் பாவிக்கப்பட்டபோது குடம்பியின் வாழ்க்கைக் காலம் குறைந்து காணப்பட்டதுடன் கூட்டுப் புழுவின் பருமன் குறைந்தும், முதிர்ஈக்கள் பறக்க முடியாதனவாகவும் ஆக்கப்பட்டன.

'பூசணிக்குடும்பப் பயிர்களைத் தாக்கும் பூசணி வண்டையும், பற்றீரியா வாடலையும் கட்டுப்படுத்துவதாக அமெரிக்காவில் அறிந்துள்ளனர்.

### வேப்பெண்ணெய்

இலையரிபுழு, இறுங்கு ஈ, தென்னையில் றெப்பன் ரிஸ் வண்டு என்பவற்றை கட்டுப்படுத்துவதாகவும் சம்பியாவில் பூசணிக் குடும்பப் பயிர்களில் சுவலோவால் வண்ணத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரேமரட்ண பண்டார என்ற ஆராய்ச்சியாளர் வேப்பெண்ணெய் பாவித்து அழுக்கணவனைக் கட்டுப்படுத்த முடியும் என்று கண்டறிந்துள்ளார். வேப்பெண்ணெய், விதைகளில் ஏற்படும் பங்கசு தொற்றினைக் கட்டுப்படுத்தும்.

### வேப்பம் பிண்ணாக்கு

நெல் வயல்களில் நைதரசனைக் காற்றிலிருந்து பெற்று பயிருக்கு வழங்குவதற்கு "அசோலா" வளர்க்கப்படுகின்றது. இந்த அசோலாவுடன் வேப்பம் பிண்ணாக்கைக் கலந்து பாவித்த போது அசோலாவின் வளர்ச்சி அதிகரித்ததோடு பூச்சிகளின் தாக்கமும் குறைந்தும் காணப்பட்டதை இந்தியாவில் கண்டறிந்துள்ளனர்.

கென்யாவில் நெல் வயல்களில் பிண்ணாக்கு பாவித்த போது சந்துக் குத்திகள் அதிகளவு எண்ணிக்கையில் அழிக்கப்பட்டதோடு அதன் வளர்ச்சியும் வீழ்ச்சி கண்டது. தென்னையைத் தாக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்த தென்னை வட்டில் பிண்ணாக்கினை வைத்துக்கட்டுப்படுத்தலாம்.

தோடை, எலுமிச்சை போன்ற பயிர்களைத் தாக்கும் இலைச்சுரங்க மறுப்பியைக் கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்குக் கரைசலை விசிறிக் கட்டுப்படுத்தலாம்.

### வேப்பம் நாசினித் தொழிற்பாடு முறை

1) வெறுப்பூட்டி
2) வளர்ச்சித்தடுப்பு

பூச்சிகளை அழிக்காமல் அவற்றை விரட்டி பயிர்களைப் பாதுகாக்கும் நாசினிகள், வெறுப்பூட்டிகள் எனப் படும். வேப்பம் பொருட்களிலுள்ள மணத்தினால் பூச்சிகள் விரட்டப்படுகின்றது. வேம்பின் கலச்சாற்றிலுள்ள "அஸடிறக்டின" எனும் பதார்த்தமே பூச்சிகளை விரட்டக் காரணமாகவுள்ளது.

பூச்சிகள் மணத்தினால் விரட்டப் பட்டபோது முட்டை இடுவது தடுக்கப்படுகின்றது. கால்நடைப் புண்களுக்கு வேப்பெண்ணெய் பூசிவரும் போது உண்டாகும் மணத்தினால் ஈக்கள் விரட்டப்படுகின்றன. இது போன்றே பயிர்களிலும் பூச்சிகள் விரட்டப்படுகின்றன.

பூச்சிகளின் சில பருவங்கள் பயிரைத் தாக்கி உண்ணும் போது வேம்பின் சேர்வைப் பொருட்கள் உட்சென்று அவற்றின் வளர்ச்சியை ஆறுதலாக்கி இறுதியில் இறக்கச் செய்கின்றன. அல்லது வளர்ச்சியைத் தடை செய்து இறக்கச் செய்கின்றன. மெதுவான வளர்ச்சி பூச்சிகளில் நடைபெறுவதால் ஊன்சூறையாடிகளான நன்மை செய்யும் பூச்சிகளால் தாக்கி அழிக்கப்படுவது மற்றொரு சாத்தியப்பாடாகும்.

மேலே நாம் வேம்பின் பயன்களும் அதன் பீடைக்கட்டுப்பாட்டு முறைகளையுமே நோக்கினோம்.

இதேபோல் இங்கு இதன் மருத்துவக குணங்களைப் பார்ப்போம்.

### வேப்பிலை

புழுக்கள், பெருவியாதி, சுரரோகம், அம்மை, கொப்புளரணங்கள் ஒழியும். வேப்பிலையையும், மிளகையும் உப்புக்கூட்டி அரைத்து தூதுவளங்காயளவு இரண்டு வேளை கொடுத்துவர வயிற்றுக்கிருமிகள் மடியும். வேப்பிலையையும். மஞ்சளையும் கூட்டிப்போட கட்டி, பரு உடைத்துக் கொள்ளும்.

வேப்பம் இலைத்தண்டை அவித்துக் கொடுக்க வாதபித்தரோகம், வாந்தி, ஓங்காளம் நீங்கும் வேப்பிலைக் கொழுந்தும், அதிமதுரச் சூரணம் அரைத்து மாத்திரை செய்து தினம் ஒருவேளை கொடுத்துவர அம்மையின் பூரிப்பு அடங்கும்.

வேப்பங்கொழுந்து, ஓமம், மிளகு, வசம்பு, பூடு ஓர் அளவாக அரைத்து குடிக்க வயிற்றுப் பெருமல், அஜீரணம், குழந்தைகளின் மந்தக்களிச்சல் தீரும். முதிர்ந்த மரசமூலசூரணத்தால் நரை, திரை உடற்பிணிகள் விட்டகலும்.

### வேப்பம்பூ

நாட்சென்ற வேப்பம் பூவிக்கு சன்னி, நீடித்தவாதம், ஏப்பம், மலக்கிருமி, அரோசகம் இவை போன்ற பித்தம் சாந்தப்படும். இது பித்தாயசமாகிய கல்லீரலில் தொழிலைச் சரிப்படுத்தி மஞ்சள் நிறமான மலத்தைப் போக்கும்.

### வேப்பம் வித்து

குஷ்டம், சர்ப்பவிசங்கள், சன்னி, சொறி, சிரங்கு, ஏப்பம், மலக்கிருமி போகும் இதை வெல்லம் கட்டி அரைத்து ஏழு நாள் காலையில் சாப்பிட மூலம் போகும். இதனை நீர் சேர்த்து அரைத்துப் பூச சொறி, சிரங்கு நீங்கும்.

வேப்பம் வித்து, கஸ்தூரி மஞ்சள், வெண்மிளகு, கடுக்காய், நெல்லிப் பருப்பு இவைகளை பசுவின் பாலில் அரைத்து சிரசில் தேய்த்து சிறிது நேரம் சென்ற பின் ஸ்நானம் செய்ய எப்பிணிகளையும் வரவெட்டாமல் தடுக்கும். இதற்கு "பஞ்ச கற்பகம்' எனக் கூறுவர்.

## சமூக நோக்கு...

- வாசுகி தேவராஜ்

# நாம் எவற்றையெல்லாம் இழந்தோம்...? எவ்வாறு ஈடு செய்யப்போகிறோம்...?

கடந்த கால் நூற்றாண்டாக இலங்கையில் நடைபெற்ற யுத்தம் அதன் பின்விளைவாக பல தாக்கங்களை வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் விட்டுச் சென்றுள்ளது. 1977ஆம் ஆண்டில் இருந்து, முதலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டோரைப் பாதித்து படிப்படியாக தமது இருப்பிடத்தை இழத்தல், உறவுகளை இழத்தல், கல்வியில் பின்தங்கல், மறுபுறம் புலப்பெயர்வு என பலவழிகளிலும் எமது சமூகம் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

அரசியலில் மாற்றம், அரசியல் ரீதியான உரிமைகளைப் பெறுதல் என்பதுடன் இணையாக சமூக அமைப்பில், பொருளாதார அமைப்பில் மாற்றம் ஏற்படுவது அவசியம். பொருளாதாரச் சுழற்சியில் சகலரும் பங்கு பற்றக் கூடியதாக இருக்க வேண்டும். (வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் அரசாங்கம், நிறுவனம் போன்றன சம்பளத்தை உயர்த்தினால் அவ்விதம் சம்பளம் பெறாதோரின் நிலை என்ன? அவ்வாறானவர்கள் தொடர்ந்தும் வாழ்க்கைத் தரத்தில் பின்தங்கியுள்ளவராக, அல்லது மேலும மேலும் பின்தள்ளப்படுபவரான நிலைக்கு உள்ளாகிறார்) அரசியல் உரிமை பெற்றதன் பின், வெளிநாட்டு உதவியுடன் மாற்றம் ஏற்படும் எனக் காத்திராமல், எமது பொருளாதாரத்தின் அடிப்படையில் இருந்து அல்லது உள்ளிருந்து ஏற்படுத்தக்கூடிய மாற்றம் பற்றிச் சிந்திப்பது உண்மையான சமூக மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவுவதாகும். எமது போராட்டமானது அரசியலுரிமைக்கானது என மேலோட்டமாகக் காணப்பட்டாலும், அதற்குமப்பாற்சென்று எமது சமூகம் கொண்டிருந்த விழுமியங்கட்கும் பல்வகை வேறுபாடுகளுக்கும், அதனடியான மானப்பாங்குகளுக்கும், கண்ணுக்குப் புலப்படாமல் வரையறுத்துக்காட்ட முடியாமல் இருந்து சகல அடக்குமுறைகளுக்கும், அவற்றை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ கடைப்பிடித்து வந்தவர்களுக்கும் எதிரான போராட்டம் எனலாம். பொருளாதார வேறுபாடுகளுக்கும் தம் வாழ்வு முழுவதும் உணர்த்தும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாதிருந்த சூழலுக்கெதிரான போராட்டம். சகலருக்கும் சமமான அந்தஸ்து, கௌரவம் கிடைக்காமல் இருந்ததற்கு எதிரான போராட்டம் எனலாம்.

போராட்டம் முழுமையாக வெற்றி பெற்றது என நாம், கூறவேண்டின் இவையாவும் வெற்றி கொள்ளப்பட வேண்டும்.

இது இவ்விதமாக இருக்க யுத்தத்தின் பின்னர் (தற்காலிகமான தாகவும் இருக்கலாம்) சமூகத்தில் சக மனிதன் பற்றிய பார்வை மாறியுள்ளதா? எனின் எவ்வளவு தூரம் மாறியுள்ளது? என்பது போராட்டத்தின் உண்மையான பலனை காட்டுவதாக இருக்கும். விளக்கமாகக் கூறுவதனால் எமது பெறுமானங்கள், மனப்பாங்குகள் யுத்தத்தின் பின்னேனும் மாறியுள்ளதா? என்பதனை சகலரும் சிந்திக்க வேணடியதாக உள்ளது. மாற்றம் தனி மனிதனிலே தான் ஆரம்பிக்கவேண்டும். இவ்வாறு தனி மனிதனில் ஆரம்பிப்பதை நாம் குடும்ப அளவில், தொடர்புபடும் நிறுவன அளவில், பின் சமூக அளவில் என முழுமையான வளர்ச்சியாகக் காணமுடியும். எனவே, நடந்து முடிந்த யுத்தம் எதற்காக? அதற்காக நாம் எதையெதை இழந்தோம்? எவ்வாறு அவற்றை ஈடுசெய்யப் போகிறோம். அதனை எவ்வாறு ஆரம்பிக்கப்போகிறோம் என்பன விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாகும். இவற்றைவிட குடும்பத்தில், அதன் தலைமைத்துவத்தில், குடும்ப உறவுகளில் எனப் பல உடைவுகளை ஏற்படுத்தி உள்ளது. இவையாவற்றையும் கருத்தில் கொண்டு இழப்புக்களைச் சீர்செய்ய முற்படின் பாரிய உள, சமூகப்பணி முன்னெடுக்கப்பட வேண்டியதாயுள்ளது.

தமிழ்ச் சமூகம் பற்றிய அக்கறையுடையோரும், எமது போராட்டமும் அதன் இழப்புக்களும் அர்த்தமுடையதாக வேண்டும் என எண்ணுவோரும இது பற்றிச் சிந்திப்பதும், ஆக்க முயற்சியில் ஈடுபடுவதும் அவசியம்.

## வாசகர் கடிதம்

கிருஷ்ணன் புஸ்பமாலா 95/FM/19 யாழ் மருத்துவபீட மாணவியாகிய நான், மருத்துவபீட நிர்வாகத்தின் பழிவாங்கும் போக்காலும், யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டாலும் 2001ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எனது மருத்துவக் கல்விக்குரிய உரிமைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலையிலுள்ளேன்.

அக்காலப் பகுதியிலிருந்தே மருத்துவபீட நிர்வாகத்தின் பொய்யான கருத்துக்களாலும் என்னையும், எனது பெற்றோர், நலன்விரும்பிகள் யாவரும் ஏமாற்றப்பட்டனர். அத்துடன் எங்களின் கேள்விகளிற்கு எந்தவித எழுத்துருவிலான பதிலும் இல்லை. பல பதிவுத்தபால்களிற்கும் பதில இல்லை.

இதனால் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு தள்ளப்பட்டேன். இதன் காரணமாக மூதவையில் எனது மனு எதுவுமின்றி 2003ஆம் ஆண்டு பரீட்சை எழுத அனுமதியளிப்பதாக திடீரென ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தப்பரீட்சை எழுதிய போது மருத்துவபீட நிர்வாகத்தால் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடத்தப்பட்டேன். அதாவது மூதவை, பரீட்சை எழுத அனுமதித்தது மட்டும்தான். நூலகம் உட்பட மருத்துவபீடத்தில் எதையும் பாவிக்க முடியாது என தடுக்கப்பட்டது. மூதவையிடம் எல்லாவற்றையும் கேட்டுப்பெறறுக் கொளளும்படி துரத்தப்பட்டேன்.

அத்துடன் அந்தப்பரீட்சையிலும் பழிவாங்கப்பட்டது உறுதியான நிலையில் துறைத்தலைவர்களை சந்திக்க புதிதாகப் பதவியேற்ற பீடாதிபதியால் தடைவிதிக்கப்பட்டது. எழுத்துரு வில் துணைவேந்தருக்கும் அனுப்பினார்.

அத்துடன் பீடசபைக்கு மனு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அனுப்பப்பட்ட பதிவுத் தபால்கள் உடனடியாக உடைக்காமலே திருப்பி அனுப்பப்பட்டது. ஆக இவர்களுடைய இச்செயற்பாட்டை விளக்கி, எனது பரீட்சைப் பெறுபேறு மூதவை உறுதி செய்வதற்கு முன்னர் பூரண விசாரணை நடத்துமாறு பேரவைக்கு நேரடியாக மனுச் செய்தேன். அவர்களிடமிருந்து எதுவித பதிலுமில்லை.

அத்துடன் 06.11.2003இல் ஒரு கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் எனது பரீட்சை எழுது தலின் திறன் பற்றி எவராலும் பதிலளிக்கப்படவில்லை. மாறாக நான மாணவியல்ல என்பதை உறுதி செய்வதில் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

இதனால் துணைவேந்தரிடம் நேரடியாகச் சென்று மூதவையின் பதிலைத் தருமாறு கோரினோம். மருத்துவபீட நிர்வாகத்தின் மேல் நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது என தனது இயலாமை பற்றி குறிப்பிட்டுக் கொண்டிருந்ததால் அவர்களின் இறுதி முடிவு எதுவாயினும் எழுத்துருவில் தருமாறு வற்புறுத்தியதைத் தொடர்ந்து தங்களால் எனது வேண்டுகோள் பரிசீலிக்க முடியாதுள்ளது என எழுத்துருவில் தரப்பட்டதையடுத்து உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது.

எனது முறைப்பாட்டின் ஒரு பகுதி விசாரணைக்குட்படுத்தப்பட்ட போதே மருத்துவ பீட நிர்வாகத்தின் பல பொய்கள், ஒழிப்பு மறைப்புகள். எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் நான் இன்றுவரை மருத்துவபீட மாணவிக்குரிய உரிமையை கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிக்கை தரப்பட்டுள்ளது.

ஆனால் நான் 2001ஆம் ஆண்டிலிருந்து மருத்துவபீட மாணவியல்ல 2001ஆம் ஆண்டுவரை நூலகம் பாவிக்கும் உரிமை இருந்ததாக எழுத்துமூலமான அறிக்கை விசாரணைக்கு முன்னர் பல்கலைக்கழக நிர்வாகத்தால் அனுப்பிவைக்கப்பட்டதுடன், நிர்வாகச் செயற்பாடுகளின் விதிமுறை கூட மறைக்கப்பட்டது.

இப்படியான மருத்துவபீட நிர்வாகத்தின் அதிகார வெறியினாலும், பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டினாலும் என்னுடைய பெறுமதியான காலத்தை வீணாக்கியதோடு மட்டுமல் லாமல் எனது உணர்வுகளை இழிவுபடுத்தி, எனது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியது மட்டுமல்லாமல் என்னைச் சூழவுள்ளவர்களின் முன்னேற்றத்திலும் ஒரு தடை உருவாக்கப்பட்டது.

ஆகவே நான் 2001ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மருத்துவபீட மாணவியாக இருப்பது உறுதி செய்யப்பட்டு, அறிக்கை தரப்பட்ட நிலையிலும் இதுவரை காலமும் இறுதியாக எழுதப்பட்ட பரீட்சையின் பெறுபேறு பற்றிய விசாரணை எவராலும் மேற்கொள்ளப்படாமலும், மருத்துவபீட நிர்வாகம் தாங்களாகவே முன் வந்து இதை வெளிப்படுத்தாத நிலையும், பரீட்சைப் பெறுபேறில் நான் பழிவாங்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவைபற்றி ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளேன். ஆகவே எனக்கு நியாயபூர்வமான தீர்வு உடனடியாகக் கிடைப்பதற்கு உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

**கிருஷ்ணன் புஸ்பமாலா**

# ஈராக்கின் இடைக்கால நிர்வாகசபை அமெரிக்காவால் நேற்றுக் கையளிப்பு!

(நியூயோர்க்)

நாளை 30 ஆம் திகதி ஈராக்கிற்கான இடைக் கால அதிகாரசபையை அமெரிக்கா கையளிப்பதாக இருந்தபோதிலும், நேற்றே அமெரிக்கா அதனை உத்தியோகபூர்வமாகக் கையளித்தது.



ஆடம்பரமற்ற முறையில் பாக்தாத்தில் இடம் பெற்ற இந்தக் கையளிப்பு நிகழ்வில், ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாக அதிகாரி போல் பிறீமர் ஈராக்கிற்கான அதிகாரங்களை அந்நாட்டு நீதிபதியிடம் கையளித்தார்.

எவ்வாறான அதிகாரங்கள் நேற்றைய கையளிப்பில் வழங்கப்பட்டதென்பது, இதுவரை ஈராக்கிய மக்களுக்கு தெரியாதுள்ளதென பி.பி.ஸியின் செய்தியாளர் தெரிவித்தார்.

அதிகாரக் கையளிப்பில் பிறீமர் தெரிவிக்கையில்,

சதாம் ஹுசைனால் படுகொலை செய்யப்பட்டுப் புதைகுழிகளில் மூடப்பட்டவர்களின் இடங்களைப் பார்ப்பவர்கள் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகள் ஈராக்கை விடுதலை செய்வதற்கே வந்ததென நினைப்பார்கள்.

ஈராக்கின் இந்த இடைக்கால [illegible] எதிர்காலத்தில் சந்திக்கவுள்ள மிகப்பெரிய சவால்களையெல்லாம் எதிர்கொள்ளக்கூடிய வல்லமையுடையதென நான் நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

ஈராக்கிற்கான அமெரிக்காவின் நிர்வாக அதிகாரி போல் பிறீமர் கையளிப்பு நிகழ்வின் பின்னர், நேற்று மாலையே ஈராக்கிலிருந்து, அமெரிக்கா செல்வதாக இருந்தது.

இந்தக் கையளிப்பு நிகழ்வில், கலந்துகொண்ட ஈராக்கியப் பிரதமர் அலாவி தெரிவிக்கையில், இது ஒரு வரலாற்று நாள், சந்தோசநாள், அனைத்து ஈராக்கியரும் எதிர்காலத்தில் முன்னோக்கிய திட்டங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்துடன், ஈராக்கிற்கான பொதுத தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும். இந்தத் தேர்தல் தாமதமடைந்ததற்குக் காரணம் பாதுகாப்பில் முன்னேற்றமடையாமையே எனவும் தெரிவித்தார்.

நாளையே அதிகாரசபை கையளிக்கப்பட இருந்தபோதும், இஸ்தான் புல்லில் நடைபெற்ற நேட்டோ தலைவர்களின் கூட்டத்தில் ரொனி பிளேயருடன் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் சபாரி கலந்துரையாடியதை அடுத்து இந்த ஆச்சரியமான அறிவித்தலை நேற்று முன்தினம் வெளியிட்டார்.

ஈராக்கில் நேற்று நடைபெற்ற கையளிப்பு நிகழ்வின்போது பெருமளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனவும் தெரியவருகிறது.

## மின்னல் தாக்கி 15 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் கிழக்குப்பகுதியில் ஜெஷியாங் மாகாணத்தில், டியூகியாவோ கிராமத்தில் 30 பேர் ஒரு மரத்தின் கிழ் சூதாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது, எதிர்பாராத விதமாக மின்னல் தாக்கிய தால், மரத்துக்குக் கீழே சூதாடிக் கொண்டிருந்தவர்கள் தரையில் சாய்ந்தனர். அவர்களில் 15 பேர் இறந் தனர். 15 பேர் காயம் அடைந்தனர்.

## 10 மாதக் குழந்தையின் வயிற்றினில் சிசு!

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூரில் 10 மாதக் குழந்தை வயிற்றில் இருந்த சிசு, அறுவைச்சிகிச்சை மூலம் வெற்றிகரமாக நீக்கப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூர் மாவட்டம் கங்கன்பவதா பகுதியைச் சேந்த விவசாயத் தொழிலாளர்கள் லாவு சவுக்கிகார், வர்ஷா இவர்களது பத்துமாத ஆண் குழந்தை மயூர்.

குழந்தை மயூருக்கு பிறந்த நாள் முதல் வயிறு பெரிதாகிக் கொண்டே இருந்தது. இதனால், சந்தேகமடைந்த குழந்தையின் பெற்றோர் மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்துச் சென்றனர். குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர்கள் மயூர் வயிற்றில் சிசு ஒன்று இருப்பதைக் கண்டறிந்தனர்.




உடனடியாக மயூருக்கு மூன்று மணி நேர அறுவைச் சிகிச்சை மேற்கொண்டார் வைத்தியர் கிஷோர் ஷிவேஸ்வர்கார். குழந்தையின் வயிற்றிலிருந்த சிசு நீக்கப்பட்டது. தற்போது மயூர் நல்ல நிலையில் இருக்கின்றான். சிசுவுக்கு தலை,கை,கால், கண், மூக்கு போன்றவை வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தன.

குழந்தைகளின் வயிற்றில் இது போன்று இன்னொரு சிசு வளர்வது மிகவும் அபூர்வம் என வைத்தியர் கிஷோர் தெரிவித்தார்.

## காஸா குண்டு வெடிப்பில்: இஸ்ரேலியச் சிப்பாய் பலி!




(காஸா)

காஸா நகரில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இஸ்ரேலியச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஐவர் காயமடைந்தனர்.

குஷ்கடிவ் சந்தியில் உள்ள இஸ்ரேலிய இராணுவ நிலை மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் ஒரு இஸ்ரேலியப் படைச்சிப்பாய் கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவத்தில் சுமார் 30 இஸ்ரேலியர்கள் காயமடைந்ததாகவும், இதனால் - காஸா நகரமக்கள் வீதியில் இறங்கி கொண்டாடியதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## ஹெயிட்டியின் முன்னாள் பிரதமர் அந்நாட்டு பொலிஸாரால் கைது!

ஹெயிட்டியின் முன்னாள் பிரதமர் யுவோன் நெப்ரியூன் அவரது பதவிக்காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக அந்தநாட்டுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

ஹெயிட்டியின் தலைநகரிலுள்ள யுவோனின் இல்லத்தில்வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெயிட்டியின் ஜனாதிபதியாக அரிஷ்டைட் இருந்த காலப்பகுதியில் யுவோன் பிரதமராக இருந்தார். அவ்வேளை இடம்பெற்ற பெருமளவிலான மக்களின் படுகொலைகளுக்கு [illegible] காரணமாக இருந்தாரெனத் [illegible]விக்கப்படுகிறது.

ஆனால், தன்மீதான இந்த நடவடிக்கை அரசியல் உள்நோக்கு கொண்டதென யுவோன் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட யுவோன் ஹெயிட்டி தலைநகரான போட் ஓபிறின சிலுள்ள சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஹெயிட்டியின் ஜனாதிபதி அரிஷ்டைட்டின் ஆதரவாளர்கள் அங்கு நடந்த வன்செயல்களுக்கும், குற்றங்களுக்கும் காரணமெனத் தற்போதைய பிரதமர் ஹேகாட தெரிவித்தார்.

அவர்கள் சட்டத்தை மதிக்கும் சமூகமாக இருக்கவில்லை. அத்துடன் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களையும் அவர்கள் மதிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

நாம் தேசியரீதியில் நிலைமையைச் சீர்படுத்த வேண்டும். அதன் மூலம் எமது நாட்டை உயர்வடையச் செய்யலாம். சட்டத்தை நிலைநாட்டுவதற்கு எமக்கு புதிய நேரமொன்று தேவைப்படுவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதமர் மீதான விசாரணையை குறுகிய காலத்தில் நீதியான முறையில் நடத்தி முடிக்கவேண்டுமென ஹெயிட்டிக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

அத்துடன், நாம் ஹெயிட்டி அதிகாரசபையைக் கேட்டுக்கொள்வது என்னவெனில், முன்னாள் பிரதமரின் கௌரவம், பாதுகாப்பு ஆகியவற்றை பாதுகாக்குமாறும், மேற்சொன்ன விடயங்களைக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கக் காட்டுப் பகுதியில்: தோல் உரிக்கும் அபூர்வ பல்லி!

அமெரிக்காவின் காட்டுப்பகுதிகளில் ஒருவித ராட்சத பல்லி இனம் உள்ளது. மிக நீளமான இந்த அபூர்வ பல்லி பாம்புகளைப் போல அடிக்கடி சட்டை உரிக்கிறது. பாம்புகள் தனது உடல் முழுவதும் உள்ள தோலை உரித்து விடுவது போல இந்தப் பல்லியும் அடிக்கடி தோல் உரிக்கிறது.



ஆனால், முழுவதும் தோல் உரிக்காமல் பகுதி பகுதியாக தோல் உரிக்கிறது. உரிக்கும் அந்தத் தோலை தானே விழுங்கி விடுகிறது. சத்துக்கள் நிறைந்ததாம் இந்தத் தோல், பல்லிக்குதான் மனிதனுக்கு அல்ல!

## அமெரிக்க கடற்படை வீரர் ஈராக்கில் கடத்தப்பட்டார்!



(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க கடற்படை வீரர் ஒருவரும், பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த சாரதி ஒருவரும் இஸ்லாமிய போராளிகளால் கடத்தப்பட்டனர்.

ஈராக்கிய சிறையிலுள்ள கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் அமெரிக்கக் கடற்படை வீரர் கொல்லப்படுவாரென போராளிகள் எச்சரித்துள்ளனர்.

போராளிகள் அனுப்பியதாகத் தெரிவித்து, அல்ஜசீரா ஒளிபரப்பு நிலையம் ஒளிபரப்பிய வீடியோ நாடாவில் அமெரிக்கக் கடற்படை வீரர் இராணுவச் சீருடையுடன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தனது இராணுவ அடையாள அட்டையை கையில் வைத்திருந்தபடி காணப்பட்டார்.

இவர் தனது கடமையில் இருந்த வேளையிலேயே தம்மால் கடத்தப்பட்டதாகவும், பாகிஸ்தானை சொந்த இடமாகக் கொண்ட இவரது பெயர் வசீவ் அலி ஹுசைன் எனவும் போராளிகள் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதியிலிருந்து தமது கடற்படை வீரர் ஒருவரைக் காணவில்லையென அமெரிக்க இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால் அல் ஜசீராவில் காட்டப்பட்டவர் தான் காணாமற் போனவரா என்பது தெரியாமலுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

காணாமற்போனவர் அமெரிக்க கடற்படையின் முதலாவது தாக்குதல் படைப்பிரிவைச் சேர்ந்தவரென அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அமெரிக்க கடற்படையின் குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்த கடத்தல் தொடர்பாக உறுதிப்படுத்தவில்லையென அமெரிக்க இராணுவத்தின் அறிக்கை தெரிவித்தது.

இதேவேளை, அல்-அராபியா ஒளிபரப்பு சேவையில் காட்டப்பட்ட



வீடியோ நாடாவில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஈராக்கில் பணிபுரியும் கார்ச் சாரதி கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவத்திற்கு உதவி செய்தவரையே தாம் கடத்தியதாக இனம் தெரியாத குழுவினர் அந்த வீடியோ நாடாவில் தெரிவித்தனர்.



ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் பலாத் ஜெற்றிப, அபுசராகிப் போன்ற சிறைகளில் எமது உறுப்பினர்கள் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுதலை செய்தாலே பாகிஸ்தான் நாட்டவர் விடுதலை செய்யப்படுவாரெனவும், இதற்கு மூன்று நாள் கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளதாகவும்-

அத்துடன், ஈராக்கிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தை பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் உடனடியாக மூட வேண்டுமெனவும் கடத்தியவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச்செய்தி தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகள் தகவல்களைத் திரட்டி வருவதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் பைசால் சாலி ஹயாட் தெரிவித்தார்.

அத்துடன், கடத்தப்பட்டவர் பாகிஸ்தானியரா என்பதனை உறுதியாகக் கூறமுடியாது. ஈராக்கிலுள்ள எமது தூதரக அதிகாரிகள் இது தொடர்பாக தேவையான நடவடிக்கையை எடுத்து வருகின்றார்களெனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்க னவே மூன்று துருக்கிய நாட்டவர்கள் ஈராக்கில் கடத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலகின் பெரு நகரங்களில் நான்கில் மூன்று பங்கு கடலை அணமித்தே இருக்கின்றன. உலக சனத்தொகையில் 40 சதவீத மானவர்கள் கடற் கரையிலிருந்து 60 கிலோ மீற்றர்கள் தூரத்துக்குள் வாழ்கிறார்கள்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தாக்கப்பட்டனர்!

(கொழும்பு)

பாலியகொட பொலிஸ் நிலையத்தை கண்காணிக்கச்சென்ற இலங்கை மனித உரிமை ஆணைக குழுவின் மூன்று உத்தியோகஸ்தர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்தில் கைதிகள் துன்புறுத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து அங்கு கண்காணிப்பு நடவடிக்கைக்காகச் சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகஸ்தர்களே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

முன்னர் ஒரு தடவையும் கண்காணிப்பு நடவடிக்கைக்காகச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகஸ்தர்கள் பாலியகொட பொலிஸாரால் தாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்த முறை இடம்பெற்ற தமது உத்தியோகத்தர்கள் மீதான தாக்குல் தொடர்பாக உயர் நீதிமன்றம் வரை செல்வதற்கு மனித உரிமை ஆணைக்குழு முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## கொழும்பு....

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுபபாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்திப்பார்.

எனினும், இவரது சந்திப்புக்கள் பற்றி அட்டவணை எதுவும் தயாரிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

நாளை கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனை சந்திப்பதற்கு முன்னதாக இன்று ஜனாதிபதியை சந்திக்கலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

## வவுனியா.....

இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புதிய மணிப்புரம் என்ற இடத்தைச் சேர்ந்த இவர், சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் புளொட் அமைப்பிலிருந்து விலகியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லவும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வங்கிக் கணக்கு...

களை அந்தந்த வங்கிகள் சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது.

யாழ்.செயலகத்திலிருந்து இயங்கும் இலங்கை வங்கிக்கிளை, பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக்கிளை, ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக்கிளை, சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை முதலியவற்றிற்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வங்கிக்கணக்குகள் சி.ஐ.டியினரால் ஆராயப்பட்ட பின்னர், [illegible] அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் இதன் பின் மேலதிக விசாரணைகள் இந்த விடயம் தொடர்பாக நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## புதிய அரசு பதவியேற்றதன்...

அவர் தொடர்ந்து கூறுகையில்-

கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பில், இன்றைய சூழல் தொடர்பாக கலந்துரையாடினோம். முக்கியமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் இன்றைய நிலைமைகள், கருணாவை தமது பாதுகாப்பில் வைத்துக் கொண்டு இராணுவத்தினர் ஏற்படுத்துகின்ற குழப்பங்கள் தொடர்பாக விளக்கிக் கூறினோம்.

குறிப்பாக கருணாவுடன் நீண்ட காலமாக இருந்து, தற்போது எம்மிடம் வந்துள்ள பெண் போராளிகளின் கருத்துக்களைக் கொண்டு தான் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் நாம் கதைத்திருக்கிறோம்.

இந்தப் பெண் போராளிகள் இவ்வளவு காலமும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நேரடிப் பாதுகாப்பின் கீழ் இருந்திருக்கிறார்கள்.

கிழக்கில் நடைபெற்ற கொலைகளுக்கும் கருணாவுக்கும் சம்பந்தமிருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறன நிலைமைகள் தொடர்வது யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்கு பல நெருக்கடிகளை உருவாக்கும் என விளக்கியுள்ளோம்.

இராணுவத்தினர் கருணாவை தமது பாதுகாப்பில் வைத்துக் கொண்டு, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கொலைகளையும், குழப்பங்களையும் மேற்கொண்டு பதற்றநிலையை தோற்றுவித்துள்ள சூழலில், அங்குள்ள எமது தளபதிகள் இராணுவத்தினருடனான சந்திப்புக்களைத் தவிர்த்தனர். மேற்படி சம்பவங்களுக்கு முடிவுகாணப்படும் வரை இராணுவச் சந்திப்புக்களை அவர்கள் தவிர்த்துக்கொள்வார்கள் என்பதை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு நாங்கள் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறோம்.

வடமாகாணத்தில் - மாவட்டங்கள் தோறும் தேவையேற்படும் போது எமது பொறுப்பாளர்களுடன் இராணுவத்தினர் சந்திப்புக்களை நடத்திவருகின்றனர். இந்த நடைமுறை தொடர்கிறது.

கருணா விவகாரத்தால், போர் நிறுத்த உடன்பாட்டில் பல சிக்கல்கள் உருவாகியுள்ளது என்பதில் நிச்சயமாக சந்தேகம் ஏதுமில்லை என நினைக்கிறேன். சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், போர்நிறுத்த உடன்பாட்டை பேணுவதிலும்தான் கருணாவின் நடவடிக்கை பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

கருணாவுக்கு பாதுகாப்பளித்துக்கொண்டு - கருணா என்ற பெயரில் படைத்தரப்பினால் இந்தக் குழப்பங்கள் ஏற்படுத்தப்படுவதை உறுதிசெய்துள்ளோம். நாம் இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே வெளிப்படுத்தி வந்தாலும், அண்மைக்காலத்தில் இதனை மிகவும் ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளோம்.

கருணாவிடம் நீண்டகாலமாக இருந்துவிட்டு தப்பிவந்த பெண் போராளிகள் இதனை உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

இந்தநிலையில், யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்த பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதுடன் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை நாங்கள் அவர்களுக்கு தெளிவாக்கியுள்ளோம்.

போர்நிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவதென்பது எம்முடைய கைகளில இல்லை. அது படைத்தரப்பினரதும், அனுசரணையாளர்களாக இருக்கும் நோர்வே தரப்பினரதும், கண்காணிப்புக்குழு தரப்பினரதும் கைகளில்தான இருக்கிறது என்பதை இன்று அவர்களுக்கு நாங்கள் முன்வைத்திருக்கிறோம்.

ஆகவே, எதிர்காலம் அவர்களின் கைகளில்தான் உள்ளது. அவர்களுடைய முடிவைப் பொறுத்தே இதற்குரிய முடிவையும் நாங்கள் கூறக்கூடியதாக இருக்கும்.

இன்று இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் ஊடாக அரசாங்கத்திற்கு தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

கருணா என்பவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல படுகொலைகளைச் செய்து, பல குழப்பங்களை ஏற்படுத்தி, சமாதான முன்னெடுப்புக்களுக்கும், யுத்தநிறுத்த சூழ்நிலைக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியவர்.

குற்றமிழைத்த இவரைப் பாதுகாப்பதன் மூலம் பல படுகொலைகளுக்கு காரணமாக படையினர் இருக்கின்றனர்.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் நடேசன் படுகொலை, பல்கலைக்கழக பேராசிரியர் படுகொலை ஆகியவற்றிலும் கருணா சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது கூட ஓரளவு உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற பல கொலைகள் அங்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. நாளாந்தம் அங்கு பதற்ற நிலை அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இதற்குக் காரணமானவர் கருணா.

ஆகவே, அவரை இராணுவம் பாதுகாத்துக்கொண்டு - அரசாங்கம் இவரைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும்வரை, இந்தச் சமாதான முன்னெடுப்புக்களில் அவர்கள் நம்பகத்தன்மையுடன் நடப்பது சாத்தியமில்லையென்பதை இன்று சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஆகவே, பாரிய நெருக்கடியான, சிக்கலான பிரச்சினையாகவே இதனை நாம் கருதுகிறோம்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளரும் எங்களுடைய பேச்சு வார்த்தை அணியில் உறுப்பினர் என்ற வகையில், இவ்வாறான சந்திப்புக்களில் அவரும் எம்முடன் இணைந்து கலந்துகொள்கின்றார் என அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (108)

# குடாநாட்டு அபிவிருத்தி பணிகள்; கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையிலான பணத்தில் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் தொடர்பாக ஆராயும் வகையிலான கூட்டமே நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், மாவை சேனாதிராசா, க.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்வி சார் பொறுப்பாளர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவது தொடர்பாகவும், அகதிமுகாம்களில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கிவரும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும், பெண்கள் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், அவற்றிற்கான நிதியை ஒதுக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## கருணா.....

தினார்.

இவரது கருத்தினைக் கேட்டறிந்த தமிழ்ச்செல்வன் மேற்குறிப்பிட்ட விடயத்தினை வலியுறுத்தியதுடன் கருணாவை யார் பாதுகாப்பாக வைத்திருப்பதென்பதில் தம்மிடம் ஆதாரங்கள் உள்ளதெனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கருத்து தெரிவித்த புறூவ் ஹொவ்டே யுத்த நிறுத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் தமது பூரண ஆதரவை வழங்கியதாகத் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில், விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும், கண்காணிப்புக்குழுத் தரப்பில் அதன் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அரசுக்கு ஆதரவு வழங்குமாறு நிதியமைச்சர் பேச்சு நடத்தினார்

## உடுவே தம்மலோக தேரர் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கடந்த 22 ஆம் திகதி ஜாதிக ஹெல உறுமயவின் அதியுயர் பீடத்தினரைச் சந்தித்து அரசிற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டதாக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

கொழும்பு யாவத்தை சொலைமான் பெரஸ் ஆசிரமத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஹெல உறுமய தலைவர் வண.எல்லாவல மேதானந்த தேரர், பிரதித் தலைவர் ஒமல்கே சோபித தேரர், பொதுச் செயலாளர் உடுவே தம்மலோக தேரர், ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக உடுவே தம்மலோக தேரர் மேலும் தெரிவித்ததாவது -

அரசுக்கு ஆதரவு வழங்குமாறு அமைச்சர் கேட்டபோது அரசாங்கம் குறித்த எவ்வித நம்பிக்கையும் அற்று ஆதரவினை வெளிப்படுத்துவது எவ்வாறென ஹெல உறுமயவின் உயர் மட்டத்தினர் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்றில் கொலன்னாவ சிறி சுமங்களதேரர் மற்றும் அக்மீமன தயாரத்ன தேரரைத் தாக்கியது குறித்து அரசு மௌனம் சாதிப்பது குறித்தும் எவ்வாறாயினும் அரசின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஹெல உறுமய எதிர்பார்த்திருப்பதாக அமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு அமைய அரசிற்கு எதிர்காலத்தில் ஆதரவு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படுமென அதியுயர் பீடம் அமைச்சருக்குத் தெரிவித்தது.

பிக்குகளைத் தாக்கியமையை இட்டு தான் தனிப்பட்ட முறையில் கவலைப்படுவதாக அமைச்சர் கூறினார். அவ்வாறெனின் ஹெல உறுமயவினால், அடுத்த மாதம் ஐந்தாம் திகதி களனி ரஜமஹா விகாரையில் நடத்தப்படவுள்ள திட சங்கற்ப பூஜையில் கலந்து கொள்ளுமாறு எல்லாவெல மேதானந்த தேரர் அமைச்சரிடம் அழைப்பு விடுத்தபோது, இதில் கலந்துகொள்வது குறித்து ஜனாதிபதியிடம் கேட்டுச்சொல்வதாக அமைச்சர் தெரிவித்ததாகவும் தம்மலோக தேரர் தெரிவித்தார்.

## மனுக்கள் மீதான...

யைச் சேர்ந்த லோகேஸ்வரன் சேரன், புத்தூரைச் சேர்ந்த பூதத்தம்பி ஜதிஸ்குமார், அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதாகரன், நாகமுத்து செல்வரத்தினம், கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பரமு சந்திரசேகரம். ஆகியோரின் வழக்குகளில் முதலாவது பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த சோமரத்தின ராஜபக்ஷ நேற்று மேல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர், 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரியாலை இராணுவ முகாமில் கடமையாற்றியவர் இவர் கொழும்பில் இருந்து வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் விமானம் மூலம் பலாலி விமானப் படைத்தளத்திற்கு அழைத்து வரப்பட்டு, யாழ். சிறைச்சாலை பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புடன் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி முதலாம் பிரதிவாதியான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ தொடாபாக தான் சில அறிவுறுத்தல்களை சட்டமா அதிபரிடமிருந்து பெற வேண்டியுள்ளதால், வழக்கை வேறு ஓர் தவணைக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இவற்றைவிட கோப்ரல் ராஜபக்ஷ தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக, தான் ஒரு சட்டத்தரணியை நியமிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்குமாறு நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டார். இதற்கு அமைய நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

ராஜபக்ஷவை யாழ் சிறைச்சாலையில் வைத்திருப்பதற்கு பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதாகவும் மேற்படி நபர் சிறையில் இருந்து தப்பியோட ஏற்கனவே முயற்சித்துள்ளார் என்றும் யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனை அடுத்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் இவரைத் தடுத்து வைக்குமாறு நீதிபதியால் கட்டளையிடப்பட்டது. இதைவிட பலாலி விமானத்தளம் வரை ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் காணாமற் போனோர் தொடர்பான வழக்குகளில் இதுவரை ஆட்சேபனைகள் வழங்காதவர்கள், வழக்குகளின் ஆட்சேபனைகளை மன்றில் சமர்ப்பிக்குமாறு அடுத்தமாதம் 28 ஆம் திகதி வரை இறுதித் தவணை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழக்கின் பிரதிவாதிகளாக கிராமசேவகர், இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, சட்டமா அதிபர், சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பதவிவகித்த பலாலி படைத் தளபதி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

'பாஸ்போட்' தவறவிடப்பட்டுள்ளது

முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்துக்
கடந்த வெள்ளிக்கிழமை (25.06.2004) அன்று 3 மணியளவில்
ஆறுமுகம் வரதன் என்பவரது
கனடா நாட்டிற்கான பாஸ்போட் தவறவிடப்பட்டுள்ளது. அதனை
வைத்திருப்போர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது
தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்புகொண்டு ஒப்படைத்து
உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

நமது ஈழநாடு,
இல. 267,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

அல்லது

ஆ.வரதன்,
காரைக்கால் றோட், இணுவில்
T.P. No: 077 6514790
021 4590742

(சி-2709)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.